ஆசாரியர் குந்த குந்தர் அருளிய

அஷ்ட பாகுடம்

(தரிசன பாகுடம்)

மொழிபெயர்ப்பாளர்

ஆத்மபந்து பரதசக்கரவர்த்தி ஜைன் சாஸ்திரியார்

நியாய தீர்த்தா, பிரவீண் பிரசாரக் (ஹிந்தி)

வெளியீடு

பரமாத்ம தத்துவ பிரசார நிலையம்

72, போர்ச்சுகீசு சர்ச்சு சாலை

சென்னை-600 079

ஆசாரியர் குந்த குந்தர் அருளிய

அஷ்ட பாகுடம்

(தரிசன பாகுடம்)

ஆத்மபந்து **பரதசக்கரவர்த்தி ஜைன் சாஸ்திரியார்**

நியாய தீர்த்தா, பிரவீண் பிரசாரக் (ஹிந்தி)

வெளியீடு

பரமாத்ம தத்துவ பிரசார நிலையம்

72, போர்ச்சுகீசு சர்ச்சு சாலை

சென்னை-600 079

வெளியீடு : 1

முதல் பதிப்பு : 500 படிகள்

விலை : ரூ. 2—50

அச்சிட்டோர் :

ஆசாரியர் குந்த குந்தர் அச்சுப் பயிற்சி நிலையம்,
குந்த குந்தர் நர் - 604 502

பதிப்புரை

ஆன்மத் தத்துவ உலகின் கதிரவன், மூல சங்க முதல்வன், விதேகத்தில வீற்றிருக்கும் ஸ்ரீ 1008 பகவான் சீமந்தர சுவாமியைக் கண்டு வணங்கி, ஆன்மத் தத்துவங் களை த்திவ்விய துவனி வழிக் கேட்டு வந்து, பாரத நாட் டில் தூய ஆன்மத்தத்துவ விளக்கம் கூறும் 'சமய சாரம்' 'பிரவசன சாரம்', 'நியம சாரம்' முதலான அரிய ஆகமங் களை ஆக்கித் தந்த ஆசாரியர் **குந்த குந்த தேவர்.** இஞ் ஞானி இத் தகைய ஆன்ம விளக்க நூல்களை அருளாது போயிருப்பாரேயானுல் நாம் ஆன்ம தத்துவ உண்மைகளை அறியும் வாய்ப்பை இழந்து நெறி யறியாது நிலை தவறி இருப்போம். நம்மைக் காத்து நெறிப் படுத்தியவர் ஆசாரிய தேவர். இவர் அருளிய நூல் **'அஷ்ட பாகுடம்'** அவையாவன:

1 தரிசன பாகுடம்	5 பாவ பாகுடம்
2 சூத்திர பாகுடம்	6 மோக்ஷ பாகுடம்
3 சாரித்திர பாகுடம்	7 இலிங்க பாகுடம்
4 போத பாகுடம்	8 சீல பாகுடம்

முத்திப் பாதையின் முதல் அடியாக, அறத்தின் ஊற்றுக் கண்ணாக, நல் ஞானம், நல்லொழுக்கங்களுக் குத் தோற்றுவாயாக விளங்குவது நற் காட்சி ஆகும். குணத்தான வரிசையில் முத்திக்கு அடி கோலும் நான்கா வது குணத்தான நிலையில் விரதமில்லாத நற் காட்சி நிலே ('அவிரத சம்யக் திருஷ்டி' நிலே) யை வைத்திருப்பது இதன் இன்றியாமையை நன்கு வலியுறுத்தும். அணுவிர தம், மகாவிரதம் இதன் வழிப்படுவனவாகும். இந்த அடிப் படையிலேயே ஆசாரிய தேவரும் 'அஷ்ட பாகுடத்தில்' முதலில் 'தரிசன பாகுடத்தை' அமைத்துள்ளார். நற்காட்சி யின் அகலத்தையும் ஆழத்தையும் ஆசாரிய தேவர் இதில் தொட்டுக் காட்டுகிறார்.

நற் காட்சி அடிப்படையில் அமையாத அறிவு முத லானவை இருந்தும் இல்லாமைக்கு ஒப்பாகும் என்று நய

அடிப்படையில் விளக்கியுள்ளார்.

ஆசாரியர் சமந்த பத்திரர் வினைப் பயனால் பெரும் பசி நோய்க்கு ஆட்பட்டு ஒழுக்கம் தவறிய காலத்தும் நற்காட்சியைஇழக்காமல் இருந்தார் என்பதை அவரது 'ப்ருஹத் சுயம்பு ஸ்தோத்திரம்' நன்கு காட்டும். ஆசாரிய தேவரும்'ஒழுக்கத்தைஇழந்தாலும்காட்சியைஇழக்காதவன் மீண்டும் ஒழுக்கத்தைக் கைக் கொண்டு சித்தி பெறுவான். ஆனால் காட்சியை இழந்தவன் என்றும் முத்தி பெற முடியாது' என்று வலியுறுத்தியுள்ளார். இத்தகு சிறப்புடைய நற்காட்சியை விளக்கும் 'தரிசன பாகுடத்தை' முதலில் வெளியிட முன் வந்தேன். அடுத்த இரண்டு பாகுடங்களும் அச்சு ஏற அணியமாக உள்ளன. அறத் தத்துவம் பரப்ப ஆர்வமுள்ள கொடை மனம் கொண்டோர் பொருளுதவி செய்வார்களானுல் அவற்றையும் உடனே வெளியிடலாம்.

இப்பொழுது வெளிவரும் இந்நூலை வெளியிட அன்புடன் நன்கொடை வழங்கிய அன்பர்கள்:

கூனம்பாடி திரு. மு. ஜென்னத் ஜைன்	ரூ. 201
திருப்பறம்பூர் திருமதி. சந்தானம்சரசுவதி எசோபத்திரன் நைனர்	ரூ. 201
சென்னை பூபேந்திரா பிளாஸ்டிக் கம்பெனி	ரூ. 201

மேற்கண்ட நன்கொடையாளர்களுக்கு என் இதயம் கனிந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலின் 300 படிகள் ஆச்சாரிய குந்த குந்தர் கல்வி நிறுவன வளர்ச்சிக்காக வழங்கப்படுகிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நூல் வேண்டுவோர் நிறுவனத்தை அணுகலாம்.

இந் நூலை அழகுற அச்சிட்டுத் தந்த ஆசாரியர் குந்த குந்தர் அச்சுப் பயிற்சி நிலையத்தார்க்கு மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,

ஆத்மபந்து பரதசக்கரவர்த்தி ஜைன் சாஸ்திரியார்

ஸ்ரீ குந்த குந்தாய நம:

அஷ்ட பாகுடம்

1 தர்ஸன பாகுடம்

காஊண ணமுக்காரம் ஜினவரவஸஹஸ்ஸ வட்டமாணஸ்ஸ I
தம்ஸணமக்கம் வோச்சாமி ஜஹாகம்மம் ஸமாஸேண II 1

நான் (குந்த குந்தாசாரியர்) ஜினவரர்களில் முதல்வரான விருஷப தேவரையும் (ஆதிநாதர்) கடைசி தீர்த்தங்கரர் வர்த்தமான-ரையும் (மகாவீரர்) வணங்கி, அஷ்ட பாகுடங்களில் முதலாகும் தர்சன பாகுட மெனும் 'ஸம்யக் தர்சன' மார்கத்தை முறையாகவும் சுருக்க மாகவும் கூறுவேன்.

'ஜின வர விருஷப' எனும் அடைமொழியில் உள்ள 'ஜின' என்பதற்கு 'எண் வினைப் பகைவர்களை வென்றுயர்ந்தவன்' என்று பொருள். அவிரத 'ஸம்யக் த்ருஷ்டி' (விரத மில்லாத சம்யக் த்ருஷ்டி) முதற்கொண்டு குண சிரேணி வழியில் சென்று வினைகளை உதிர்ப்பு (நிர்ஜரை)ச் செய்யும் அனைவரும் **ஜினன்** என்றே அழைக்கப்படுவர். இவர்களில் உயர்ந்தவர் "வர" ஆகும் கணதரர் முதலானோர் **ஜின வரர்** எனப்படுவர். இவர்களுக்கெல்லாம் முதன்மையானவர் ('விருஷப') **தீர்த்தங்கரர்கள்**. இவர்களுள் முதலில் விருஷபரும் கடைசியில் வர்த்தமானரும் தோன்றினர். இவர் அனைவரும் **'ஜினவர விருஷபர்'** எனப்படுகின்றனர். ஆகவே இவர்களுக்கு நூலாசிரியர் முதற்கண் தமது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறார்.

'வர்த்தமான' எனும் சொல் எல்லோருக்கும் பொதுவாகப் பொருந்தும் சொல். ஏனென்றால் அனைவரும் அந்தரங்க பகிரங்க லக்ஷ்மியோடு விளங்குகின்றனர். தவிர 'ஜினவர விருஷப' என்றால் விருஷப தேவரென்றும் 'வர்த்தமான' என்றால் வர்த்தமான

தீர்த்தங்கர ரென்றும் பொருள் கொண்டு வணங்கும் போது இடையில் உள்ள எல்லா தீர்த்தங்கரர்களும் வணங்கப்பட்டனர் என்பது உய்த்து உணரப்படும்.

மேலும் தீர்த்தங்கர பரம தேவர்களை **பரம** குரு என்றும் அவர் வழி நடந்து உயர்ந்த கணதரர் முதலானவரை **அபர** குரு என்றும் கூறுவர். இவ்வாறு சாஸ்திரங்கள் தோன்றவும் ஸம்யக் ஞானம் வளரவும் காரணமாகவு முள்ள **பர அபர** குரு **பரம்பரையை** வணங்கி நூலியற்ற முயலுவதாக ஆசார்ய தேவர் கூறுகிறார். 1

தம்ஸணமூலோ தம்மோ உவஇட்டோ ஜிணவரேஹிம் ஸிஸ்ஸாணம் 1
தம் ஸோஊண ஸகண்ணே தம்ஸணஹீணோ ண வந்திவ்வோ ll 2

கணதரர்கள் முதலான சீடர்களுக்கெல்லாம் ஸர்வக்ஞ பகவான் (ஜினேஸ்வரன்) தர்மத்தை அருளிச் செய்தார். என்னவென்று? கோயிலுக்கு அஸ்திவாரமும் மரத்திற்கு வேரும் எப்படி ஆதாரமாக அமைந்துள்ளனவோ அது போன்றே தர்மத்திற்கு வேராக அமைந்துள்ளது ஸம்யக் தரிசனம்.

"ஆகவே உத்தம சீலர்களே! ஸர்வக்ஞ தேவனால் அருளப்பட்ட தர்சன மூல தர்மத்தைச் செவிகளால் கேட்டுணர்ந்து, ஸம்யக் தரிசன மில்லாதவர் வணக்கத்திற்குரியர் அல்லர் என்று தெளிந்து, ஸம்யக் தர்சன மில்லாதவரை வணங்காதே" என்று ஆசாரியர் கூறுகிறார்.

ஏனென்றால் வேரில்லாமல் அடிமரம் (திம்மை), கிளை, பூ, காய், கனி போன்ற பொருள்களைக் காண முடியாதது போல, ஸம்யக் தர்சன மில்லாதவர்களிடம் தர்மம் இருக்க முடியாது. ஆகவே தர்மத்தை வேண்டி, தர்ம மில்லாத ஒருவரை வணங்குவதன் மூலம் நமக்கு தர்மம் எப்படிக் கிடைக்க முடியும்? ஆகவே அத்தகையவர்களை வணங்குவதினால் பயன் யாதும் இராது என்பதாகும்.

இனி தர்மம், தர்சனம் இவ் விரண்டின் மெய்ப் பொருளை அறிதல் வேண்டும் இவற்றின் விளக்கங்களைச் சுருக்கமாக நூலாசிரியர் இதே நூலில் தருகிறார். எனினும் வேறு சில நூல்கள் கூறும் விளக்கங்களையும் இங்கே காணலாம்.

தர்மம்: ஆன்மாவைப் பிறவித் துன்பத்தினின்றும் விடுவித்து அழியா இன்ப நிலையை எது அடைவிக்கிறதோ அதுவே தர்மம் எனப்படுகிறது.

தர்சனம்: 'தர்சன' எனும் சொல்லுக்குப் 'பார்த்தல்' என்று பொருள். அதாவது தர்மமே உருவாக உள்ள **ஆன்மாவைக் காட்டுவது தர்சனம்.**

உலகியலில் எதனால் தர்மம் சுட்டப்படுகிறதோ (அறியப்படுகிறதோ) அதை **தர்சனம்** அல்லது **மதம்** என்று கூறுவர். ஆகவேதான் பாரத நாட்டில் 'ஷட் தர்சனம்', 'ஷண் மதம்' என்னும் பெயர் வழங்குகிறது. தர்மமும் தர்சனமும் எல்லோருக்கும் பொதுவாக உள்ளது. என்றாலும், முழுதுணர் ஞானியாகிய ஸர்வக்ஞனே வஸ்துவின் உண்மை ஸ்வரூபம் அறிவான்.

இருப்பினும் அஞ்ஞானிகள் தம் அறிவிற்கேற்றவாறு தாமே பொருளை விளக்கி உறுதிப்படுத்திப் போதிக்கிறார்கள். ஆனால் ஜைன தர்மம் ஸர்வக்ஞ பரம்பரையை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் வஸ்துவின் இயற்கை தத்துவம் இங்கே உள்ளபடி விளக்கப்படுகிறது.

இதில் நிச்சயம் வியவகாரம் என இருவகையாக தர்மம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதையே நான்கு வகையாகப் பிரித்தும் விவரிக்கிறார்கள்.

1 வஸ்து சுவபாவம் (இயற்கை குணம்)
2 உத்தம க்ஷமை முதலிய பத்து தர்மங்கள்
3 ஸம்யக் தர்சனம் (நற்காட்சி), ஸம்யக் ஞானம் (நல் ஞானம்), ஸம்யக் சாரித்ரம் (நல்லொழுக்கம்)
4 ஜீவன்களைக் காப்பது (உயிர் காத்தல்) அகிம்சை

மேற்கண்ட நான்கு பிரிவுகளையும் நிச்சய நோக்கில் காணும் போது எல்லாம் ஒன்றிலேயே அடங்கி விடுகின்றன.

1 வஸ்து சுவபாவம் — ஜீவன் என்று அழைக்கப்படும் வஸ்துவின் உண்மை சொரூபம் தர்சன, ஞான, சாரித்ர ரூபமாகும். அந்த மாறுகை வடிவமே சேதனம் (ஞானம்) எனப்படுகிறது. அந்த சேதன சுவபாவம் விகார பாவங்களில்லாமல் மேற்கூறிய சுத்த சுவபாவத்தில் மாறுவது தர்மம் எனப்படுகிறது.

2 உத்தம க்ஷமாதி பத்து தர்மங்கள் கூறப்பட்டதன் காரணம் குரோதம், மானம் போன்ற கஷாய வடிவமின்றி ஆன்மா தன் இயற்கை சுவபாவத்தில் நிலைத்திருப்பதுதான் தர்மம் என்று தெளிவிக்க. இதுவும் சுத்த சேதன வடிவமேயாம்.

3 தர்சன, ஞான, சாரித்திர மெனக் கூறியதன் பொருள் என்ன வென்றால் மூன்றும் ஞான சேதனுவின் மாறுகை என்பதே. அதுவே ஞான சுவபாவ ரூப தர்மம்.

4 உயிர் காத்தல் என்பது ஆன்மா குரோதம் முதலான விபாவ ரூப கஷாயங்களுக்கு ஆட்பட்டு, தனது அல்லது பிறரது பரியாயத்தைப் பாதிக்கக் கூடிய மரணத்தையோ, அல்லது துன்பம் விளைவிக்கக்கூடிய கிலேச பரிணுமத்தையோ கொள்ளாதிருப்பதுஆகும். இதுதான் ஆன்மாவின் சுவபாவ ரூப தர்மம். இவ்வாறு சுத்த திரவியார்த்திக நிச்சய நயத்தால் ஏற்கப்பட்ட தர்மம் ஒன்றேயாம்.

இனி வியவகார நயத்தை அடிப்படையாக வைத்துத் தர்மம் விளக்கப் படுகிறது. வியவகார நயம் மாறுகை நோக்கில் வருகிறது. ஆகவே பலவகையாகக் கூறப்படுகிறது. ஜீவனுடைய பர்யாய வடிவ மாறுகை பலவாகும். எனவே தர்மமும் பலவாகும்.

1 பயனைக் கருத்தில் கொண்டு ஒரு குணத்தை திரவியத்தின் முழுமையாகக் காண்பது (கூறுவது) வியவகார நயம்.

2 ஒரு பொருளின் குணத்தை மற்ருென்றில் ஏற்றி (ஆரோபித்து) அவ்வேருென்றைத் துணைக் காரணமாகக் கொண்டு பயன் கருதி வர்ணிப்பதும் வியவகார நயம். இங்கும் வஸ்து சுவபாவ மென்று கூறுவது நிர்விகார சுத்த சைதன்ய பரிணுமம் மட்டுமே சாதகமாக ஏற்கப்படுகிறது.

3 கஷாயங்கள் மந்த நிலையில் இருக்கும்போது உண்டாகும் நல்ல பரிணுமங்களையும் புறத்தே காணப்படும் நற்காரியங் களையும் வியவகார தர்ம மென்று கூறப்படுகிறது. இதுபோன்றே இரத்தினதிரய (மும்மணிகள்) வடிவ ஆன்ம சுவரூபத்தின் பேதமான தர்சனம், ஞானம், சாரித்திரமும் இவை காரணமாக அனுஷ்டிக்கப்படும் புறக் கிரியையும் வியவகார தர்மமென்று கூறப்படுகிறது.

4 குரோதம் முதலான கஷாயங்கள் மந்த நிலையில் இருக்கும் போது தனக்கோ அல்லது பிற ஜீவன்களுக்கோ மரணம், துன்பம், தொல்லை முதலியவைகளை விளைவிக்காமலிருப்பது ஜீவதயை எனப்படுகிறது. இவற்றைக் காப்பாற்றும் புறச்செயல் எல்லாம் வியவகார தர்மம் என்று வருணிக்கப்படுகிறது. இவ்வாறு நிச்சயம், வியவகாரம் என இருவகையாக தர்மம் விளக்கப்பட்டிருக்கிறது.

நிச்சய நோக்கில் தர்மம் ஒன்று என்றும், வியவகார நோக்கில் தர்மம் அநேகம் என்றும் கூறும்போது ஸ்யாத் வாதத்தில் முரண்பாடு காண்பதற்கில்லை. ஒரு சார்பு நோக்கில் ஒவ்வொரு குணம் காணுதல் எல்லா பிரமாணங்களாலும் உறுதி செய்யப் பட்டுள்ளது. இத்தகைய **தர்மத்திற்கு அடிப்படைதான் ஸம்யக் தரிசனமென்று கூறப்பட்டது.** இப்படிப்பட்ட தர்மத்தில் நம்பிக்கை, அன்பு, தெளிவுடன் செயல்படுவதுதான் தர்சனம். இது (மதம்) தர்மத்தின் வடிவம். இதையே தர்சனம் என்கிறார்கள். இதுவே தர்மத்திற்கு வேர் போன்றது. முதலில் நம்பிக்கை, தெளிவு, அவா இல்லையேல் தர்மத்தை ஆராதிக்கவும் இயலாது. ஒரு மரத்திற்கு வேர் இல்லையெனில் அதன் மற்ற பாகங்களும் இருக்க முடியாது. ஆகவே தர்மத்திற்கு அடிப்படை தர்சனம் என்று சொன்னது முற்றிலும் நியாயமானதே. இத்தகு சிறந்த தர்சனத்தை ஆகமங்களில் கூறியவாறு இங்கும் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

நிச்சய நோக்கில் எவ்வித குறைபாடுமின்றி சுத்த ஜீவன் அனுபவத்திற்கு வருவது அந்தரங்க ஸம்யக்தரிசனம். ஏனெனில் இது ஜீவனுடைய சுவபாவம். இத்தகைய அனுபவம் அநாதிகாலந்தொட்டு மித்யா தர்சனமெனும் கர்மத்தின் உதயத்தால் மாறாக வருகிறது. சாதி மித்யா த்ருஷ்டிக்கு மித்யாத்வம், ஸம்யக் மித்யாத்வம், ஸம்யக் ப்ரக்ருதி எனும் மூன்று ப்ரக்ருதிகளும் 'சத்' வடிவில் உள்ளன. இவைகளுக்கு உதவியாக உள்ளவை அனந்தானு பந்தி குரோதம், மானம், மாயை, உலோபம் நான்கும். இந்த ஏழு ப்ரக்ருதிகளும் உதயத்திற்கு வராமல் அமைதியாக (தணிவு) இருப்பதற்குப் புறக்காரணங்களாக விளங்குபவை திரவியம், க்ஷேத்திரம், காலம், பாவம்' என நான்கு.

திரவியத்தில் சாக்ஷாத் தீர்த்தங்கரர் தர்சனம் முதலானவை முதன்மை.

க்ஷேத்திரத்தில் சமவசரணம் காணல் முதலியன முதன்மை.

காலத்தில் அர்த்த புத்கல பராவர்த்தன காலம் பிறவி மிச்சமிருப்பது.

பாவத்தில் அத ப்ரவிருத்தி கரணம் முதலியவை.

ஸம்யக் தரிசனம் தோன்ற புறக்காரணங்கள் சிறப்பாக பலவகை என்றாலும், சிலருக்கு ஜினபிம்ப தர்சனம், சிலருக்கு பஞ்ச கல்யாண மகிமையைக் காணல், முற்பிறவி நினைவிற்கு வருதல், மிகு துன்பம் அனுபவித்தல், தேவர்களின் ரித்திகளைக் காணல்

முதலான புறக்காரணங்களால் மித்யாத்வ கர்மம் உபசமம் (தணிவு) அடையும் போது அதாவது உதயத்திற்கு வராமல் தணிந்து இருக்கும் போது ஸம்யக் தரிசனம் உண்டாகிறது. இது **உபசம சம்யக்த்வம்** எனப்படும்.

ஏழு ப்ரக்ருதிகளில் ஆறு ப்ரக்ருதிகள் உபசமம் அல்லது க்ஷயம் அடைந்து ஸம்யக் ப்ரக்ருதி மட்டும் உதயத்தில் இருக்கும் போது **க்ஷயோபசம ஸம்யக்த்வம்**, உண்டாகிறது.

மேற்கண்ட ஏழு ப்ரக்ருதிகளும் 'சத்' நிலையிலிருந்து முழுமையாக க்ஷயமாகும் போது **க்ஷாயிக சம்யக்த்வம்** உண்டாகிறது.

மேலே கூறப்பட்ட உபசமம் முதலானவை உண்டானதும் ஜீவ பரிணமத்தில் ஏற்படும் பரிணம மாற்றத்தை மூன்று வகையாகக் கூறலாம்:

1 அப்பரிணமங்கள் மிக நுண்ணியவை; கேவல ஞானத்தால் அறியக் கூடியவை. ஆகவே இந்தப் ப்ரக்ருதி ரூப திரவிய புத்கல பரமாணுக்களின் ஸ்கந்தங்களும் (கூட்டம்) மிக நுண்மையானவை. அவை பலன் தரும் சக்தியாக விளங்கும் அனுபாகமும் மிக நுண்ணிது. இவை ஸம்சாரி பிராணிகளின் ஞானத்தால் அறிய முடியாதவை.

2 ஏழு ப்ரக்ருதிகள் உபசமம், க்ஷயோபசமம், க்ஷயம் அடையும்-போது ஜீவ பரிணமம் ஸம்யக்த்வ ரூபத்தை அடைகிறது. இந்த பரிணமம் மிக சூக்ஷ்ம மானது. கேவல ஞானத்தாலன்றி அறிய வியலாதது.

3 இவ்வளவுக்கிடையிலும் ஜீவனுடைய பரிணமங்கள் சம்சாரி ஜீவன்களின் அறிவில் அறியக்கூடியவையாகவும் சில உள்ளன. அவை ஸம்யக் தரிசனத்தை அறிந்து கொள்ள புறச் சின்னங்களாக விளங்குகின்றன. அவற்றைப் பரீட்சித்து உறுதிப்படுத்துவது வியவகாரம் எனப்படுகிறது. இல்லையேல் சம்சாரி ஜீவனிடத்தில் சம்யக் தரிசனம் நிச்சயிக்க முடியாத நிலை ஏற்படும். இதனால் வியவகார தர்மங்கள் மறைந்து விடும். இதுவே ஒரு பெரிய குற்றமாகும். ஆகவே புறச் சின்னங்களை ஆகமம், அனுமானம், ஸ்வானுபவங்களால் பரீட்சித்து உறுதிப்படுத்த வேண்டும்.

அச் சின்னங்கள் யாவை? குறைபாடில்லாத சுத்த ஞான சேதன வடிவமான ஆத்ம அனுபூதிதான் முக்கிய சின்னமாக விளங்குகிறது. இந்த அனுபூதி ஞான பர்யாயமென்றாலும் சம்யக்த்வம் உண்டான பிறகே அது உண்டாகிறது. ஆகவேதான் அதைப்

புறச் சின்னமாகக் கூறுகிறார்கள். ஞானம் தனக்குத்தானே ஸ்வஸம்வேதன ரூபம். அப்போது ராக, துவேஷாதி விகாரங்கள் இல்லாத சுத்த ஞானம் மட்டும் அனுபவத்திற்கு வருகிறது.

அதாவது, **ஸ்வஸம்வேதன ரூப சுத்த ஞானம் எதுவோ அதுவே தான்** (ஆன்மா) **என்றும், வினை காரணமாக ஞானத்தில் காணும் ஆசை, வெகுளி, மயக்கம் போன்ற விபாவங்கள் தன்னுடையன** (ஆன்மாவின் ஸ்வரூபம்) **அல்ல என்றும் கண்டு பேத விஞ்ஞானத்தின் மூலம் சுத்த ஞானத்தை மட்டும் சுவைப்பது ஞானத்தின் அனுபூதி என்று கூறப்படுகிறது.** இதுவே சுத்த நயத்திற்குப் பொருளாகும். அல்லது **அனுபூதியில் கர்மங்களால் உண்டாகும் ஆசை வெகுளி போன்றவை அல்லாத அனந்த சதுஷ்டய ரூபம் தன்னுடையது; மற்ற எல்லா பரிணாமங்களும் சேர்க்கையால் உண்டானவை என்று அறியும் ஆத்ம அனுபூதி சம்யக் தரிசனத்திற்கு முக்கிய சின்னம்.** மித்யாத்வம் அனந்தானுபந்தி கஷாயங்கள் அகலும் போது இந்த ஸம்யக்த்வம் உண்டாகிறது. இந்த விசேஷ சின்னத்தை ஸம்யக்த்வ மென்று கூறுவது வியவகாரம்.

இதை ஆகம அனுமான ஸ்வானுபவத்தால் பரீட்சித்துப் பார்க்க வேண்டும் இதையே நிச்சய தத்வார்த்த சிரத்தானம் என்பர். தன்னுடைய அந்தரங்கத்தை அடிப்படையாகக் கொண்டு தன்னையே சோதிப்பதென்பது ஸ்வஸம்வேதனத்தால் அறியப்படுகிறதென்று பொருள். பிறரை அவர் தம் மொழி, செயல்களால் சோதிக்கப்படுகிறது. இது வியவகாரம். அந்தரங்கத்தை ஸர்வக்ஞனால் மட்டுமே அறிய முடியும். ஆனால் வியவகாரத்தில் உள்ள ஜீவனுக்கு வியவகாரத்தைக் கைக்கொள்ள முடியும். ஆனால் வியவகாரத்தில் உள்ள ஜீவனுக்கு வியவகாரத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்று ஸர்வக்ஞன் அருளியிருக்கிறார்.

ஸம்யக்த்வம். கேவலிகளின் கேவல ஞானத்தால் அறியக்கூடியது. ஆகவே நமக்கு ஸம்யக்த்வம் உண்டா, இல்லையா என்று நம்மால் உறுதிப்படுத்த முடியாது. எனவே நம்மை ஸம்யக் த்ருஷ்டி யென்று சொல்லிக் கொள்ளவும் இயலாது' என்பது சிலருடைய வாதம். இப்படி முற்றிலும் ஏகாந்தமாக கூறுவது மித்யாத்ருஷ்டியின் செயல். இப்படி முற்றிலும் ஏகாந்தமாகக் கூறினால் வியவகார தர்மமே மறைந்து விடும். தவிர துறவறம் மற்றும் இல்லறம் இரண்டுமே மித்யாத்வம் என்றாகிவிடும். எல்லோரும் தம்மை

மித்யா த்ருஷ்டி என்று நினைத்துக் கொண்டால் வியவகார தர்மம் எப்படிச் செயல்பட முடியும்? ஆகவே நன்கு பரீட்சித்த பிறகு தான் மித்யா த்ருஷ்டி என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. முற்றிலும் ஏகாந்தவாதிகளைத்தான் மித்யா த்ருஷ்டி என்று கூறுவர். ஆகவே முற்றிலும் ஏகாந்த வாதத்தை ஏற்றால் நாமும் பிற சமயத்தார்க்குச் சமமாகக் கருதப்படுவோம்.

தத்வார்த்த சிரத்தானம் என்பது புறச் சின்னமே. ஜீவன், அஜீவன், ஆஸ்ரவம், பந்தம், ஸம்வரை, நிர்ஜரை, மோக்ஷம் என்று ஏழு **தத்வார்த்தங்கள்**. இவற்றுடன் புண்ணியம், பாபம் இரண்டையும் சேர்த்து **'நவ பதார்த்தம்'** என்று அழைக்கப் படுகிறது. இவைகளின் உண்மை ஸ்வரூபத்தை **ஸர்வக்ஞன்** அருளியவாறு அறிந்து, ஏற்று, அப்படியே நம்புவது ஸம்யக் தரிசனத்தின் புறச் சின்னமாகும்.

மேலும் பிரசமம், ஸம்வேகம், நிர்வேகம், அனுகம்பா, ஆஸ்திக்யம் ஆகிய இவையும் ஸம்யக்த்வத்தின் புறச் சின்னங்களாகக் கூறப்படுகின்றன.

பிரசமம் : அனந்தானுபந்தி குரோதம், மானம், மாயை மற்றும் உலோபம் ஆகிய கஷாயங்கள் உதயத்திற்கு வராமல் அமைதியாக 'சத்' வடிவில் இருப்பது பிரசமம் எனப்படும்.

ஸம்வேகம் : தர்மத்திலும், தர்மத்தின் பலனிலும் உற்சாக முடையவனாக இருப்பது, தன்னைப் போன்ற இல்லற நோன்பிகள், துறவிகள், பரமேஷ்டிகள் ஆகியோரிடம் பக்தி, அன்பு, பரிவு, பாசம் கொண்டிருப்பது 'ஸம்வேகம்'.

நிர்வேகம் : ஸம்வேகத்திலேயே நிர்வேகமும் உள்ளதைக் காணலாம். தன்னுடைய (ஆன்மா) ஸ்வரூப தர்மத்தை அடைய ஆசை உண்டானதும், புறத்தே உள்ள எல்லா ஆசைகளையும் தியாகம் செய்ததாகப் பொருள்படும். அதாவது பிற பொருள்கள் அனைத்திலும் வைராக்ய மடைவது 'நிர்வேகம்'.

அனுகம்பா : எல்லா உயிர்களிடத்திலும் அன்பு, கருணை உள்ளம் கொண்டிருப்பது 'அனுகம்பா'.

ஆஸ்திக்யம்: ஸர்வக்ஞ தேவனால் கூறப்பட்ட ஜீவாதி தத்துவங்கள் உண்டு என்று நம்புவதை 'ஆஸ்திக்யம்' என்பர்.

இவை எல்லாம் ஸம்யக்த்வம் ஒரு ஜீவனில் உண்டு என்று உறுதிப்படுத்த புறச்சின்னங்களாக கூறப்பட்டன.

ஸம்யக் தரிசனத்தின் எட்டு அங்கங்கள் (குணங்கள்)
1 நிச்சங்கை (ஐயமின்மை) 2 நிர்காங்க்ஷை (அவாவின்மை) 3 நிர்விசிகித்ஸா (உவர்ப்பின்மை - அருவருப்பு இல்லாமை) 4 அமூட திருஷ்டித்வம் (மயக்கமின்மை) 5 உபகூஹனம் (செய்பழி நீக்கல் அல்லது மறைத்தல்) 6 ஸ்திதீகரணம் (விரதத்தினின்றும் நழுவியவரை மீண்டும் நிலைநிறுத்துதல்) 7 வாத்ஸல்-யம் (அன்புடைமை) 8 மார்க்கப்ரபாவனை (திருவறம் உபதேசித்தல்)

1 நிஸ்ஸங்கை (ஐயமின்மை): 'ஸங்கை' எனும் சொல் ஐயத்தையும் பயத்தையும் குறிக்கும். தர்ம திரவியம், அதர்ம திரவியம், காலத் திரவியம், பரமாணுக்கள் முதலிய யாவும் சூக்ஷ்ம வஸ்துக்கள் (நுண் பொருள்கள்).

தீபகற்பங்கள், மேருமலை முதலியவை தொலை பொருள்கள். தீர்த்தங்கரர்கள், சக்ரவர்த்திகள், மகாபுருடர்கள் முதலானோர் மறைந்த பொருள்கள். இவை பற்றிய விளக்கங்கள் ஸர்வக்ஞன் அருளிய ஆகமங்களில் காணப்படுகின்றன. அவ்வாகமங்களில் கூறப்பட்டது போல் அப்பொருள்கள் இருக்கின்றனவா அல்லது இல்லையா என்று ஐயப்படுதல், 'அநேகாந்த ஸ்வரூபம் வஸ்து' என்று கூறியது உண்மையா பொய்யா என்றல் போன்ற ஐயங்களையே 'ஸங்கை' என்று குறிப்பிடுகிறார்கள். இவ்விதமான ஐயங்கள் இல்லாமையே 'நிஸ்ஸங்கை அங்கம்' என்று கூறப்படுகிறது.

இத்தகைய ஐயம் எழுவதற்கு மித்யாத்வ கர்ம உதயம் காரணமாக உள்ளது. பிற பொருள்களில் 'தான்' எனும் எண்ணம் மித்யாத்வத்தின் செயலென்று அறிதல் வேண்டும். தானல்லாத ஒன்றில் தான் என்ற எண்ணத்தை பர்யாய புத்தி என்றும் கூறுவர். இந்த பர்யாய புத்திதான் பயத்திற்கு அடிப்படை. ஐயத்தின் மறுபெயர் பயம். இந்த பயம் ஏழு வகைப்படும்: 1 லோக பயம் 2 மறுபிறவி பயம் 3 மரண பயம் 4 தஞ்சமின்மை (பாதுகாப்பின்மை) பயம், 5 அகுப்தி பயம் (மனம், வாக்குச் செயல் அடக்கமின்மை) 6 வேதனை பயம் 7 எதிர்பாராத பயம். இத்தகைய பயம் உள்ளவர்களிடம் மித்யாத்வ கர்ம உதயம் உண்டென்று அறிதல் வேண்டும். ஸம்யக் திருஷ்டிகளுக்கு இத்தகைய பயங்கள் இருப்பதில்லை.

கேள்வி: 'பய ப்ரக்ருதி' எனும் வினை எட்டாவது குணஸ்தானம் வரை இருக்கிறதென்று ஆகமங்கள் கூறுகின்றன. அவ்வினை காரணமாக ஸம்யக் திருஷ்டிகளுக்குப் பயம் உண்டாகிறது. அவர்களுக்குப் பயமே இருப்பதில்லை என்று கூறுவது எப்படிப் பொருந்தும்?

பதில்; சாரித்ரமோக கர்மத்தின் ஒரு பிரிவுதான் 'பய ப்ரக்ருதி'. இவ் வினை உதயத்திலிருக்கும் போது ஸம்யக் திருஷ்டிகளுக்குப் பயமுண்டு என்ருலும் பயமில்லை என்றே கூறப்படுகிறது. ஏன்? அவர்கள் (ஸம்யக் திருஷ்டிகள்) அவ் வினைக்கு ஒரு முக்கியத்துவம் அளிப்பதில்லை. மேலும் பிறிதொரு திரவியம், தன் திரவிய ஸ்வபாவத்திற்கு எவ்வித தீங்கையும் விளைவிக்க முடியாதென்று ஸம்யக் திருஷ்டிக்கு நன்ருகத் தெரியும். ஆகவேதான் 'பய ப்ரக்ருதி' உதயத்தில் இருந்தும் பய மற்றவனென்று கூறுகிருர்கள். பய முண்டான போது தப்பித்துக் கொள்ள ஓடி ஒளிதல், பிறவியில் உண்டாகும் தொல்லைகள் தாங்க முடியவில்லை என்ருல் பரிகாரம் தேட முயற்சித்தல் போன்ற செயல்கள் அனைத்தும் தன்னுடைய பலவீனத்தின் அறிகுறிகளாகும். இப்படிப்பட்ட செயல்களை ஸம்யக் திருஷ்டி களிடம் காண முடியாது. ஆகவே அவர்கள் 'நிஸ்ஸங்கை' அங்க முடையவர்களென்று கூறப்படுகிருர்கள்.

2 நிர்காங்க்ஷா (அவாவின்மை): போகங்கள் பால் உள்ள பற்றை 'காங்க்ஷா' (ஆசை) என்பர். அதாவது முன்னர் தான் அனுபவித்த போகங்களில் ஆசை கொள்ளுதல், போகச் செயல்களை விரும்புதல், வினை மற்றும் வினைப் பயன்களில் மாருத பற்றுக்கொள்ளுதல், மித்யா திருஷ்டிகள் அனுபவிக்கும் போகங்களைக் கண்டு அவை நல்லதென்று நாடுதல், புலன்களுக்குப் பொருந்தாத போகங்கள்பால் வெறுப்புக் கொள்ளுதல் போன்ற செயல்கள். உள்ளத்து ஆசைகளை வெளிப்படுத்தும் சின்னங்களாகும். இது போன்ற போகப் பற்று மித்யாத்வ கர்மத்தின் உதயத்தால் உண்டாகிறது. இத்தகைய ஆசைகள் இல்லாமை 'நிர்காங்க்ஷித அங்கம்' எனப்படுகிறது. இது ஸம்யக் திருஷ்டிகளுக்குள்ள அங்கமாகும். ஸம்யக் திருஷ்டி நற் காரியங்களைச் செய்கிருன். விரதம், உபவாசம் போன்றவைகளையும் அனுஷ்டிக்கிருன். இவைகளினுல் சுப கர்மம் (புண்ணிய கர்மம்) பந்தமாகிறது. ஆனுல் புண்ணியத்திலோ, புண்ணியத்தின் பலனிலோ ஸம்யக் திருஷ்டிக்கு நாட்டமிருப்பதில்லை. ஸ்வரூப சாதனைக்கு விரதம் முதலியவை சாதகமானவை

என்ற எண்ணத்தில்தான் அனுஷ்டிக்கிறான். அதனால் கிடைக்கும் புண்ணியத்தின் பலனைக் கருதி அல்ல. இவ்வளவு சிறப்புடையது 'நிர்காங்க்ஷித' அங்கம்.

3 நிர்விசிகித்ஸா (உவர்ப்பின்மை) : அருவருப் பில்லாமை. தானே தன் குணங்களின் பெருமையை நினைத்து, தன்னை உயர்ந்தவனாகவும் பிறரைத் தாழ்ந்தவனாகவும் கருதும் மனப்பான்மை விசிகித்ஸா எனப்படுகிறது. இத்தகைய மனப்பான்மை இல்லாதவனை 'நிர்விசிகித்ஸா' அங்கமுடைய ஸம்யக் திருஷ்டி என்பர். இந்த மூன்றாவது அங்கத்தின் சின்னங்களாவன: பாப கர்மத்தின் பயனாகத் துன்பப்படும் ஒருவனைப் பார்த்ததும், அசாத வேதனீய கர்மத்தின் பயனாக அருவருக்கத் தக்க உடல்தோற்றத்தைக் கண்டும் அருவருப்புக் கொள்ளமாட்டான். நல்ல உடலழகை யுடையன், செல்வன், தனக்கு நேரில்லை என்று தன்னைக் கருத மாட்டான். மாறாக வினைப் பயன் காரணமாக ஜீவனுக்கு இப்படிப்பட்ட நிலைகள் உண்டாகியிருக் கின்றன. தனக்கும் அத்தகைய வினை உதயத்திற்கு வருமாயின் தன் நிலையும் அவன் நிலை போன்றே இருக்கு மென்று நினைப்பான். இவை 'நிர்விசிகித்ஸா அங்கத்தின்' லக்ஷணங்களாகும்.

4 அமூட திருஷ்டி (மயக்கமின்மை) : தத்துவ மல் லாதவற்றைத் தத்துவ மென்று எண்ணி நம்புவது மூடதிருஷ்டி. இந்த மூட திருஷ்டி இல்லாமைதான் 'அமூட திருஷ்டி' அங்கம் எனப் படுகிறது. தவறான காரணங்களாலும் உதாரணங்களாலும் மித்யா திருஷ்டிகளால் உறுதி செய்யப்பட்ட உண்மைக்குப் புறம்பான பொருள்கள் ஸம்யக் திருஷ்டிகளைக் கவருவதில்லை உலக பழக்க வழக்கங்களோ எண்ணற்றவை; அவை சாரமற்றவை; அவை சார மற்றவர்களால் ஆதரிக்கப் படுகின்றவை; விரும்பாத அல்லது கெட்ட பலனைக் கொடுக்கக் கூடியவை; பயனற்றவை; ஏற்புடைய காரணங்கள் இல்லாதவை; பொருளற்றவை. ஆனாலும் பழக்க வழக்கத்திலுள்ளவற்றை மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். ஏற்றுக் கொண்ட பிறகு அவைகளினின்றும் விடுபடுவது அவ்வளவு எளி தல்ல. இவைகளையே 'லோகரூடி' அல்லது 'லோக மூடம்' என்கிறார் கள்.

கடவுள் தன்மை அற்றவரைக் கடவுளென்றும், அதர்மத்தைத் தர்ம மென்றும், தகுதியற்ற ஒருவரை குரு என்றும் போற்றிப் புகழ்வது தேவ மூடம் எனப்படும். தகுதியற்ற இவர்களை

வணங்குவதாலோ, புகழ்வதாலோ, ஆராதிப்பதாலோ ஜீவனுக்கு எவ்வித நற் பயனும் உண்டாகாது.

குற்றங் குறைகள் நிறைந்த ஒருவரை கடவுள் என்றும், அவர்களால் கூறப்பட்ட இம்சை முதலியவைகளைத் தர்ம மென்றும் ஏற்றுத் தவருன பாதையைப் பின்பற்றி செயல்படுபவனை, பரிக்ரகங்களை யுடையவனை, ஸம்யக்த்வமில்லாதவனை, விரதங்களைக் கடைபிடிக்காதவனைக் குரு என்று ஏற்றுக்கொள்வது மூட திருஷ்டியின் சின்னங்கள். ஆகவே கடவுள் சாஸ்திரம் குரு ஆகியவர்களின் உண்மை சொருபங்களை முதலில் அறிதல் மிகமிக அவசியமாகும்.

கடவுள் (தேவர்) : ஆசை, வெகுளி, மயக்கம், ஞானவரணுதி வினைகள் யாவும் ஆவரணங்கள் (மறைப்பு) எனப்படுகின்றன. இந்த இருவகை (பாவ மற்றும் திரவிய) ஆவரணங்கள் இல்லாதவன் கடவுள், தேவன், பரமாத்மா என்றெல்லாம் அழைக்கப்படுகிருன். இருவகை ஆவரணங்கள் இல்லாமையால் கேவல ஞானம், கேவல தரிசனம், அனந்த சுகம், அனந்த வீரியம் (சக்தி) எனும் அனந்த சதுஷ்டயம் தோன்றுகிறது. பொதுவாக பரமாத்மா ஒன்றே என்ருலும் சிறப்பாக அரிஹந்தர், சித்தர் என இருவகையாகக் கூறுவார்கள். இவர்களுக்கு ஆயிரம் ஆயிரம் திருநாமங்கள் உண்டு. குணத்தை அடிப்படையாக வைத்துப் பார்த்தாலும் அனந்த குணங்களைக் காணலாம்.

இவர்களில் பரம ஔதாரிக திவ்ய சரீரமுடையவர், நான்கு காதி வினைகளை வென்றவர், அனந்த ஞான, அனந்த தரிசனம், அனந்த சுகம், அனந்த வீர்யமெனும் அனந்த சதுஷ்டயங்களுடன் விளங்குபவர், அறவுரை மண்டபத்தில் அமர்ந்து திவ்ய த்வனி மூலம் அறவுரையாற்றுபவர் 'அரிஹந்த தேவர்' எனப் போற்றப்படுகிருர்.

புற்கல மய உடல் இல்லாதவர், எண் வினை களை வென்றவர், எண் குணங்களுடன் விளங்குபவர், உலகத்து உச்சியில் இருப்பவர் 'சித்த பரமேஷ்டி' எனப் போற்றப்படுகிருர்.

அரஹந்தர், சித்தர், ஜினன், பரமாத்மா, மகாதேவன், சங்கரன், விஷ்ணு, பிரம்மா, ஹரி, புத்தன், ஸர்வக்ஞன், வீதராகன் என பொருள் படைத்த எண்ணற்ற திருநாமங்கள் கடவுளுக்கு உண்டு. இத்தகைய சிறப்புப் பெற்றவன் தேவன், கடவுள் என்று அழைக்கப்படுகிருன்.

குரு: ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் 'குரு' என்ற சொல் அரிஹந்தரைக் குறிப்பது புலனாகும். காரணம், மோக்ஷ மார்கத்தை தத்ரூபமாக (உள்ளவாறு) உபதேசித்தவர் அரிஹந்தர். ஆனால் அரிஹந்தருக்குப் பிறகு, குறைந்த அறிவாற்றல் மிக்கவர் நிர்க்ருந்த திகம்பர முத்திரையை ஏற்ற மகா முனிவர் 'குரு' எனப்படுகிறார். ஏனென்றால் அரிஹந்த தேவனிடம் காணப்படும் ஸம்யக் தரிசன, ஞான சாரித்திரங்கள் முழுமை பெற்று விளங்குகின்றன. ஆனால் இவை முனிகளிடத்தில் ஓரளவு தூய்மை பெற்றுள்ளன. ஸம்வரை மற்றும் நிர்ஜரை இரண்டும் மோக்ஷத்திற்குக் காரணம். இவை முனிகளிடத்தில் காணப்படுகின்றன. ஆகவே அரஹந்தரைப் போலவே ஓரளவு தூய்மை காணப்படுவதால் முனிகளும் 'குரு' எனப்படுகிறார்கள். இவர்களும் மோக்ஷ மார்கத்தை உபதேசிப்பவர்களே.

இந்த நிர்க்ருந்த முனிநிலை பொதுவாக ஒன்றே என்றாலும், சில தனித்தன்மையைக் கருதி மூவகையாகக் கூறப்படுகிறது: 1 ஆசாரியார் 2 உபாத்யாயர் 3 சாதுக்கள் என. பதவி அடிப்படையில் வேறுபடுத்திக் கூறினாலும் முனிநிலையில், இருக்க வேண்டிய ஒழுக்க நெறிகளில் வேறுபாடில்லை. அதாவது புறத்தோற்றத்தில் நிர்க்ருந்த நிலை, ஐந்து மகாவிரதம், ஐந்து சமிதி மூன்று குப்தி ஆக பதின்மூன்று சாரித்ரங்களும் எல்லோருக்கும் பொதுவானது. தவநிலையும் அவரவர் சக்திக்கு உட்பட்ட ஒன்றே; ஆகரா விதிகளும் ஒன்றே; சரியை, ஆசனம் ஒன்றே; சம்யக் தரிசன ஞான சாரித்ர ரூப மோக்ஷ மார்கம் ஒன்றே; அறிபவன் அறிவு அறியும் பொருள் எல்லாம் ஒன்றே; குரோதம், மானம் முதலிய கஷாயங்கள் மீது வெற்றிக் காண்பதும் எல்லோருக்கும் பொதுவானதே; செயல் முறைகளும் ஒன்றே; சிறப்பு வேறுபாடு இவைதாம்.

ஆசாரியர்: ஐந்து ஆசாரங்களை பிறர் ஏற்கச் செய்வது, ஒழுக்கத்தில் ஏதாவது குறை நிகழ்ந்தால் அவருக்குப் பிராயச்சித்த விதிகளை அறிவிப்பது, தர்மோபதேசம் செய்வது, தீக்ஷை அளிப்பது ஆசார்ய பரமேஷ்டிகளின் கடமைகளாகும். இவர்களும் நம் வணக்கத்திற் குரியவர்களே.

உபாத்யாயர்: வாதத்திறமை சொற்திறமை, கவி இயற்றும் திறமை, பொருளாழம் காணும் திறமை ஆக நான்கிலும் சிறந்த ஆற்றல் பெற்றவர் உபாத்தியாய பரமேஷ்டி எனப்படுகிறார்.

இதோடு சாஸ்திர ஸ்வாத்யாயம் (நூல் ஓதுதல்)

முதன்மையானது. தான் ஸ்வாத்யாயம் செய்வதோடு மற்றவர்களுக்கும் செய்விப்பது உபாத்யாய பரமேஷ்டிகளின் கடமை.

இவர்களுடைய முனி விரதம், மூல குணம், உத்தரகுணம் எல்லாம் ஆசார்ய பரமேஷ்டிகள் போன்றதே. முக்கியமாக தீக்ஷை அளித்தல், உபதேசம் செய்தல் போன்ற சிலவகைச் செயல்கள் இவர்களுக்கு இருப்பதில்லை. இவர்கள் தங்கள் ஆத்ம சாதனையில் ஈடுபட்டிருப்பார்கள். ஆகமங்களில் கூறப்பட்ட எல்லா விதிமுறைகளும் இவருக்கு உண்டு. இவர்கள் நம் வந்தனைக்குரியவர்கள். வேடதாரி துறவிகள், விரதமில்லாதவர்கள்' புலனுசையுடையவர்கள் வணக்கத்திற்குரியவர்கள் அல்லர்.

குரு (சாதுக்கள்) : இந்த ஐந்தாம் காலத்தில் வேடதாரிகள் அதிகம் காணப்படுகிறார்கள். சுவேதாம்பரர், யாபனீய சங்கம், கோபுச்ச பிச்ச சங்கம், நிபிச்ச சங்கம், திராவிட சங்கம் முதலியவர்கள் வேடதாரி சாதுக்களின் வரிசையில் வருகிறார்கள். இவர்கள் முற்றிலும் நம் வணக்கத்திற்குரியவர் அல்லர். மூலசங்கம் நக்ன திகம்பரர் (பிறந்த மேனியில் காட்சியளிப்பவர்) இருபத்தெட்டு மூல குணங்களையுடையவர்கள்; ஜீவதயையை முன்னிட்டும், சௌச சுத்திக்காகவும் மயிற்பிஞ்சத்தையும் கமண்டலத்தயும் மட்டுமே வைத்திருப்பவர்கள்; விதிப்படி ஆகாரம் உட்கொள்பவர்கள் 'குரு' எனப்படுகிறார்கள். இவர்கள் தாம் நம் வணக்கத்திற்குரியவர்கள். ஏனென்றால் தீர்த்தங்கரர்கள் தீக்ஷையை மேற்கொண்டபோது மேலே கூறப்பட்ட உருவிலேயே காணப்பட்டனர். இதற்குப் புறம்பான வேடத்தை ஏற்கவில்லை. இதையே ஜின தரிசனம் என்பார்கள்.

தர்மம் (சாஸ்திரம்) : ஆன்மாவைப் பிறவித் துன்பமெனும் தாழ்நிலையிலிருந்து பிறவா நிலையென்ற உயர்நிலைக்கு எது கொண்டு செல்கிறதோ அதையே தர்மம் என்பர். இந்த தர்மம் முனி-சிராகவன், ஓரளவு தர்சன, ஞான, சாரித்ரம்-முழுமையான தர்சன ஞான சாரித்திரம், நிச்சயம்-வியவகாரம் என இருவகைப்படும். இவைகளுக்கு அடிப்படை (அஸ்திவாரம்) ஸம்யக் தரிசனம். இந்த நற்காட்சியின்றேல் தர்மம் உண்டாகாது. இவ்விதமாக தேவ. குரு, தர்மத்திலும், உலகப் பொருள்களிலும் சரியான நோக்கு இருப்பது - மூட நம்பிக்கை இல்லாதது - அமூட திருஷ்டி அங்கம் எனப்படுகிறது.

5 **உபகூஹனம்** (செய்பழி நீக்கல் அல்லது மறைத்தல்) : தன் ஆன்மாவின் சக்தியை அதிகரிக்கச் செய்வது 'உப பிரம்ஹணம்' எனப்படும். அல்லது சம்யக் தரிசன ஞான சாரித்ரங்களை தன் புருஷார்த்தத்தின் வாயிலாக வளர்த்துக் கொள்வது உப பிரும்ஹணம். இதையே 'உபகூஹனம்' என்றும் கூறுவர். ஜைன தரிசனம் தனக்குத்தானே சித்தி பெற்றது. அறியாமையாலோ அல்லது ஆற்றல் இன்மையாலோ இதை ஆராதிக்கும் போது குறைகள் ஏற்படின் அவைகளை தன் அறிவாற்றலால் மறைப்பது அல்லது நீக்குவது 'உபகூஹன' அங்கம் எனப்படுகிறது.

6 **ஸ்திநீகரணம்** (விரதத்தினின்றும் நழுவியவரை மீண்டும் அதில் நிலைநிறுத்துதல்) : தர்மத்தினின்றும் நழுவியவரை மீண்டும் அத்தர்மத்தில் நிலைநிறுத்துவது ஸ்திதீகரணமெனும் அங்கம். தான் தன் வினைப்பயன் காரணமாக ஸம்யக் தரிசனத்தினின்றும், ஒழுக்கத்தினின்றும் நழுவி விடும்போது, தன் சொந்த புருஷார்த்தத்தின் பலத்தால் மீண்டும் ஸம்யக் தரினத்தில் உறுதிப்படுத்திக் கொள்வதுபோல நழுவிய பிறரை வெறுக்காமல் உபதேசத்தின் அடிப்படையில் அவர்களை நிலைநிறுத்துவது 'ஸ்திதீகரண' அங்கமாகும்.

7 **வாத்ஸல்யம்** (அன்புடமை) : அரஹந்தர், சித்தர், ஜினபிம்பம், ஜினலயம் நான்கு சங்கங்கள், ஆகமங்கள் ஆகியவைகளில் மாருத உள்ளுணர்வுடன் அன்பு கொள்வது வாத்ஸல்ய அங்கம் எனப்படும் (கன்றினைக் கண்ட பசு போல் என்று அறிக.) தர்மத்திற்கோ, அல்லது தர்ம ஸ்தாபனங்களுக்கோ இடையூறு ஏற்படும்போது தன் சக்தியை மறைக்காமல் சக்திக்கு உட்பட்டு நிவர்த்திக்க தன்னை அர்ப்பணித்துக் கொள்வது தர்மத்தின் பால் அன்பு காட்டுவது வாத்ஸல்ய அங்கமாகும்.

8 **பிரபாவனு அங்கம்** (திருவறம் உபதேசித்தல்): அறத்தின் பெருமையைப் பரப்புவது பிரபாவனு அங்கம். மும்மணி வாயிலாக தன் ஆன்மாவை பிரகாசிக்கச் செய்தல், தானம், தவம் பிரதிஷ்டை, பூஜை முதலியவைகள் வாயிலாகவும், சமத்காரச் செயல்களாலும் ஜின தர்மத்தைப் பரப்புவது பிரபாவனு அங்கம்.

மேற்கண்ட எட்டு அங்கங்கள் எவருக்கு உண்டோ, அவருக்கு சம்யக் தரிசனம் உண்டென்று அறிக. இந்த சம்யக் தரிசனத்தைக் குறிக்கும் எட்டு அங்கங்களும் மித்யா திருஷ்டிகளிட

மும் காணப்பட்டால் சம்யக்த்வத்திற்கும் மித்யாத்வத்திற்கும் உள்ள வேறுபாட்டை எப்படி அறிய முடியும்? நன்கு பரீட்சித்துப் பார்த்தால் ஸம்யக் திருஷ்டிகளிடம் காணப்படுவது போல மித்யா திருஷ்டிகளிடம் காணப்படாது என்ற உண்மை விளங்கும். பரீட்சிப்பதற்குத் தன்னுடைய சொந்த அனுபவம் முக்கியமானது. ஸர்வக்ஞனுடைய ஆகமத்தில் ஆத்மானுபவம் எப்படி இருக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளதோ அவ்வனுபவம் தனக்கு இருப்பின் மனம், வாக்குச் செயல்கள் செயல்படும் விதத்தையும் நம் நடைமுறையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நன்கு தெளிவாகும். இப்படிப் பரீக்ஷிக்கும்போது வித்தியாசம் காணப்படுகிறது. இதுவே வியவகார மார்கம். ஆகவே ஸம்சாரி ஜீவன்களுக்குத் தன் அறிவின் அடிப்படைக்கு ஏற்ற செயல்கள் காணப்படுகின்றன. இது வியவகார மார்க்கமே. உண்மை நிலையை ஸர்வக்ஞன் அறிவான். வியவகார ஜீவன்களுக்கு வியவகாரம் ஏற்புடையதென்று கூறப்பட்டுள்ளது. அந்தரங்க ஸம்யக்த்வ பாவரூப சம்யக்த்வமே சம்யக் தரிசனம்.

புறத்தே காணப்படும் தரிசனம், விரதம், சமிதி, குப்தி முதலிய சாரித்ரங்களும் 28 மூல குணங்களுடன், நக்ன திகம்பர முத்திரை ஆகியவை ஸம்யக் தரிசனம் எனப்படுகிறது. இப்படியெல்லாம் ஆராய்ந்து பார்த்துத்தான் தர்மத்தின் அடிப்படை ஸம்யக் தர்சனமென்று விளக்கப்பட்டது. ஸம்யக் தரிசனம் இல்லாத வரை வணங்குவதோ பூஜிப்பதோ கூடாதென்று அழுத்தமாகக் கூறியுள்ளார்கள். இத்தகைய உபதேசம் பவ்வியர்களுக்கு ஏற்புடைய ஒன்ருகும். 2

தம்ஸணபட்டா பட்டா தம்ஸணபட்டஸ்ஸ ணத்தி நிவ்வாணம் ।
ஸிஜ்ஜந்தி சரியபட்டா தம்ஸணபட்டா ண ஸிஜ்ஜந்தி ॥ 3

ஸம்யக் தரிசனத்தினின்றும் நழுவியவர் வீழ்ந்தவர் (ப்ரஷ்டன்) என்றே கருதப்படுவார். இவரால் முக்தியடைய இயலாது ஸம்யக் தரிசனத்தினின்றும் நழுவாது, சாரித்ரத்தினின்று (ஒழுக்கம்) மட்டும் நழுவியவர் முக்தி அடைய இயலும் ஆனல் ஸம்யக் தரிசனத்தினின்றும் நழுவியவர் ஒருபோதும் முக்தி அடைய இயலாது.

ஜின தர்மத்தில் நம்பிக்கை இழந்தவன் 'பிரஷ்டன்' எனப்படுகிருன். ஆனல், நம்பிக்கை இழக்காது சாரித்திர மோகனீய

கர்மத்தின் உதயத்தால் சாரித்திரத்தினின்றும் எப்பொழுதாவது விலகியவனை 'பிரஷ்டன்' என்று கூறுவதில்லை. ஏனென்றால், தர்சனம் இழந்தவன் முக்தி அடைய இயலாது. ஆனால், சாரித்திரம் இழந்தவனிடம் ஸம்யக் தரிசனம் உறுதியாக இருக்குமானால் அவன் மீண்டும் சாரித்ரத்தை ஏற்று முத்தியடைய முடியும். தரிசனம் இழந்தவனுக்கு இந்த வாய்ப்பு இல்லை, அதாவது ஸம்யக் தரிசனமின்றி சாரித்ரத்தை ஏற்க முடியாது. ஏற்றாலும் அது ஸம்யக் சாரித்திரமாகாது.

ஒரு மரத்தின் கிளைகள் வெட்டப்பட்டாலும், அதன் வேர் நிலைத்திருக்குமானால் மீண்டும் கிளைகளும், இலைகளும் துளிர்க்க வாய்ப்புண்டு; மேலும் காய் கனிகளும் உண்டாகும். ஆனால் வேர் களையப்பட்டு விட்டால் கிளை முதலியன தோன்ற முடியுமா? முடியாது. ஆகவேதான் தர்மத்திற்கு வேர் ஸம்யக் தரிசனமென்று கூறப்பட்டது.

பல சாத்திரங்கள் அறிந்திருந்தாலும் ஸம்யக் தரிசனம் இல்லையென்றால் பிறவியில்தான் உழல வேண்டும். அத்தகைய வெறும் ஞானத்தைவிட ஸம்யக் தரிசனமே சிறந்ததென்று இனி விளக்குகிறார். 3

ஸம்மத்த ரயணபட்டா ஜாணந்தா பகுவிஹாஇம் ஸத்தாஇம் ।
ஆரஹணாவிரஹியா பமந்தி தத்தேவ தத்தேவ ॥ 4

ஸம்யக்த்வம் எனும் அருமணியை இழந்தவன் பல வகை சாத்திரங்களை அறிந்தாலும், அதனால் பாராட்டப்பட்டாலும் அவன் பிறவியில்தான் உழலுவான்.

இங்கு தத்தேவ தத்தேவ என்று இருமுறை கூறி பிறவியில் அவன் உழலுவதை வலியுறுத்துகிறார். பலவகை சாத்திரங்களை அறிந்திருந்தும் ஸம்யக்த்வம் இல்லாத ஞானம் போற்றுதலுக்குரியது அல்ல என்பதாம்.

இனி ஸம்யக் தரிசனமின்றி கடுந்தவம் புரிந்தாலும் ஆத்ம சொரூபத்தை அடைய முடியாது என்கிறார். 4

ஸம்மத்தவிரஹியா ணம் ஸுட்டு வி உக்கம் தவம் சரந்தா ணம் ।
ண லஹந்தி போஹிலாஹம் அவி வாஸஸஹஸ்ஸகோடீஹிம் ॥ 5

ஸம்யக் தரிசனம் இல்லாதவன் முறையான கடுந்தவம்

புரிந்தாலும் ஸம்யக் தரிசன, ஞான சாரித்ர வடிவமான தன் ஆத்ம ஸ்வரூபத்தை அடைய முடியாது; ஆயிரம் கோடி ஆண்டுகள் தவம் புரிந்தபொழுதும் ஸ்வபாவ குணத்தை அடைய முடியாது.

இங்கே ஆயிரம் கோடி ஆண்டு என்று கூறியதை அத்துணைக் காலமென்று கருதிவிடலாகாது; அதிக காலம் என்பதை குறிக்கவே கூறப்பட்டதாகும். மேலும், தவம் மனிதப் பிறவியில் மட்டுமே உண்டு. அது குறுகிய ஆயுட்காலத்தையுடையது. இம் மனிதப் பிறவி நீங்கி விட்டால் மீண்டும் எப்போது இப்பிறவி கிடைக்கு மென்று கூற முடியாது, ஆகவேதான் ஆயிரம் கோடி ஆண்டுகள் என்று கால நீட்சியைக் குறிக்க சுட்டியுள்ளார்.

இக்காதையில் 'ணம்' எனும் சொல் இரு முறை வந்துள்ளது. இவை அசை சொற்கள்; அணி பற்றி வந்தன.

ஸம்யக்த்வம் இல்லாத சாரித்ரமும் தவமும் பயனற்ற தென்று கூறிய ஆசார்ய தேவர் இனி ஸம்யக் தரிசனத்துடன் கூடிய அனைத்துச் செயல்களும் பயனுள்ளவை எனக் கூறுகிறார். 5

ஸம்மத்த ணாணதம்சண பல வீரிய வட்டமாண ஜே ஸவ்வே ।
கலிகலுஸ பாவரஹியா, வரணாணி ஹோந்தி அஇரேண ॥ 6

ஒருவன் ஸம்யக் தரிசனம், ஞானம், சாரித்ரம், பலம், வீர்யங்களில் கலிகால (ஐந்தாம் காலம்) பாபத்தினின்றும் விலகி நின்றான் என்றால், அவன் குறுகிய காலத்திலே கேவல ஞானத்தைப் பெறுவான்.

இந்தப் பஞ்சம காலத்தில், ஜடப் பொருள்கள்மீது உள்ள அவாவினால் உண்மை பாதையினின்றும் விலகி நிற்கும் ஜீவன் ஆசா பாசங்களிலிருந்து விலகி, தன்னுடைய சொந்த வீரிய சக்தி யைக் கொண்டு ஜின தர்மத்தில் கூறப்பட்டுள்ள நம்பிக்கை வடிவமான ஸம்யக் தரிசன ஞான பலத்தை வளர்த்துக்கொள்ளுமானால் அந்த ஜீவன் மிகக் குறுகிய காலத்திலேயே கேவல ஞானத்தைப் பெறும். 6

ஸம்மத்த ஸலில பவஹோ ணிச்சம் ஹியயே பவட்டஏ ஜஸ்ஸ ।
கம்மம் வாலுயவரணம் பந்துச்சிய ணாஸஏ தஸ்ஸ ॥ 7

எந்த மனிதனுடைய உள்ளத்தில் ஸம்யக் தரிசனமெனும் நீரோட்டம் இடைவிடாது ஓடிக்கொண்டிருக்கிறதோ, அம்மனிதனுக்கு

வினைகளாகிய தூசுகள் ஒட்டுவதில்லை; மேலும், முன்னர் கட்டப்பட்ட வினைகளும் அகலுகின்றன.

ஸம்யக் தரிசனமுடைய ஒருவன் எப்போதும் தன் ஞான ஸ்வபாவ மாறுகையில் இருப்பதால், முன் வினைகளின் உதயத்தால் தோன்றக்கூடிய ஆசை, வெகுளி மயக்கம் போன்ற விகார பாவங்களுக்கு இவன் உடையவனாக (கர்த்தாவாக) இருப்பதில்லை. ஆகவே, தீவிர கஷாயங்களாகிற களங்கம் இல்லாத பரிணமம் தூய பரிணமம் ஆகிறது. இத் தூய பரிணமத்தையே நீரோட்டத்திற்கு ஒப்பிடுகிறார்.

இடைவிடாது நீர் ஓடிக்கொண்டிருக்கையில் மணல், தூசு போன்றவை நிற்பதில்லை. அதுபோல, ஸம்யக் திருஷ்டி தூய பரிணம மாறுகையில் இருப்பதால், முன் வினை உதயத்தால் உண்டாகும் இன்ப துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருந்தாலும், புதிய வினைகளைக் கட்டுவதில்லை. ஏனென்றால் ஸம்யக் திருஷ்டி அந்த இன்ப துன்பங்களைத் தன் ஸ்வபாவமாக பாவித்து விருப்பு வெறுப்புகளைக் கொள்வதில்லை. ஆகவே அந்த ஜீவனுடைய பரிணமத்தில் வினைக்கட்டுக்குக் காரணமாக உள்ள விருப்பு வெறுப்புகள் இல்லாததால் வினைக்கட்டு உண்டாவதில்லை.

வியவகார நிலையில் ஆராய்ந்து பார்த்தாலும், உள்ளத்தே அந்தரங்கத்தில் ஸம்யக்த்வமெனும் நீரோட்டம் உள்ள ஸம்யக் திருஷ்டி, கலிகால மகிமைக்கு உள்ளாகி, மித்யா, தேவ, குரு சாத்திரங்களை வணங்குதல் முதலான செயல்களில் ஈடுபடாததால், அதீசார ரூப தூசும் அவனை அணுகுவதில்லை. மேலும் இவை காரணமாக உண்டாகும் மித்யாத்வ ப்ரக்ருதி பந்தமும் ஏற்படுவதில்லை.

இனி, எவன் தர்சன 'பிரஷ்டனோ' அவன் ஞான சாரித்திரத்தாலும 'பிரஷ்ட'னெனப்படுகிறான். அப்படிப்பட்ட 'பிரஷ்டன்' தான் பிரஷ்டனாவதுமல்லாமல் பிறரையும் தன் வழியில் இட்டுச் சென்று 'பிரஷ்டன்' ஆக்குகிறான் என்கிறார். 7

ஜே தம்சணேஸு பட்டா ணாணே பட்டா சரித்தபட்டா ய ।
ஏதே பட்ட வி பட்டா ஸேஸம் பி ஜனம் விணாஸந்தி ॥ 8

தர்சனத்தை இழந்தவர் (பிரஷ்டன்) ஞான சரித்திரங்களை

இழந்தவரே. இவர்கள் இழிந்தவர்களுள் மிக இழிந்தவர்கள். ஸம்யக் தரிசனம் பெற்று ஞான சாரித்திரமில்லாமல் சிலர் இருக்கலாம் உள்ளத்தில் தர்சனம் இல்லாமல் புறத்தே ஞான சாரித்திரங்களைக் காப்பாற்றுவோராகவும் சிலர் இருக்கலாம். தர்சனம், ஞானம், சாரித்ரம் இந்த மூன்றும் இல்லாதவர் தலையாய பிரஷ்டர். இப்படிப்பட்டவர்கள் தாம் பிரஷ்டனாக இருப்பதல்லாமல் பிறரையும் பிரஷ்டனாக்குகிறார்கள்.

இங்குப் பொதுவாக கூறப்பட்டிருப்பதால் இப்படியும் ஒரு கருத்து தோன்ற இடமிருக்கிறது. என்னவென்றால் உண்மையான தர்சன ஞான சாரித்ரங்கள் ஒரு புறம் இருக்கட்டும். தன் தர்மத்தின்மீது இருக்க வேண்டிய நம்பிக்கை, ஞானம், அடிப்படை ஒழுக்க நெறிகள் (சாரித்ரம்) இல்லாதவன், மனம்போன போக்கில் செல்லக் கூடியவன். தாம் இழிந்தது போல தன்னைப் பின்பற்ற வேண்டி பிறருக்கு உபதேசம் முதலியன செய்து அவர்களையும் இழிவடைய செய்கின்றனர். சிலர் அவர்களுடைய செயலைக் கண்டு நழுவிவிடுகிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட தீவிரகஷாயமுடையவர்கள் சேர்க்கையை முழுமையாக ஒதுக்கிவைக்க முயலவேண்டும்.

இத்தகைய பிரஷ்டர்கள் தர்மத்தை ஆராதிக்கும் நல்லோர்களுக்கு களங்கம் கற்பித்து பிரஷ்டன் என்று கூறி நிந்திக்கிறார்கள். 8

ஜோ கோவி நம்மசீலோ ஸஞ்ஜமதவ ணியம ஜோக குணதாரி ।
தஸ்ஸ ய தோச கஹந்தா பக்கா பக்கத்தணம் திந்தி ॥ 9

தர்ம சிந்தனையுள்ளவர்கள் தன் ஸ்வாபவரூப ஆத்ம தர்மத்தை சாதிப்பதில் நாட்டங்கொண்டவர்கள் புலனடக்கமெனும் சம்யம தர்மத்தை ஆராதிப்பவர்கள் ஆறு காய ஜீவ ரக்ஷணை எனும் அகிம்சையைப் பின்பற்றி நடப்பவர்கள் அந்தரங்க பகிரங்கமெனும் பன்னிரெண்டு தவ நிலையை மேற்கொண்டவர்கள். அன்றாட கிரியைகளுடன் மூலகுணம், உத்தரகுணங்களை குறைவின்றி ஏற்று ஆராதிப்பவர்கள், தியானம் சமாதிநிலை ஆகியவற்றில் விதிப்படி மகான்களாவர்.

இத்தகு பெருமை வாய்ந்த மகான்களைப் பார்த்து பிரஷ்ட ஜீவன்கள், தர்ம பிரஷ்டர்கள், பாவிகள், வேடதாரிகள் என்றெல்லாம் தூற்றுகிறார்கள். ஏனென்றால் இவர்கள்

தனக்குத்தானே பிரஷ்டர்களாதலால் பிறரையும் அதே கண்ணோட்டத்தில் காண்கிறார்கள்.

ஆகவே தர்மாத்ம ஜீவன்களைத் தூற்றும் பாவிகளின் வலையில் சிக்காமலிருக்க வேண்டியது நமது முதல் முயற்சியாக இருத்தல் வேண்டும். 9

ஜஹ மூலம்மி விணட்டே, துமஸ்ஸ பரிவார ணத்தி பரவட்டி ।
தஹ ஜின தம்ஸண பட்டா, மூலவிணட்டா ண ஸிஜ்ஜந்தி ॥ 10

ஒரு மரத்தின் வேர் அழிந்துவிட்டால் அம்மரத்தின் குடும்பம் அதாவது அடிமரம் (திம்மை) கிளை, இலை, பூ, காய், கனிகள் வளர முடியாது ஜின தர்ஸனத்தில் பிரஷ்டனான ஒருவன், புறத்தே பிறந்த மேனியில் அதாவது திகம்பர நிலையை ஏற்று மூல உத்தர குணங்களைப் பெற்று பிஞ்சம் கமண்டலம், நிர்தோஷ ஆகாரம் முதலிய புறக் கிரியைகளில் குறைவின்றி நடந்துகொண்டாலும், அந்தரங்கத்தில் (அகத்தே) ஆறு திரவியங்கள், ஏழு தத்துவங்கள், ஒன்பது பதார்த்தங்களின் உண்மை அறிவு இருப்பினும், பேத விஞ்ஞான ரூப ஸம்யக் தரிசனம் இன்மையால் அவன் வேர் அழிந்த மரத்திற்கு ஒப்பாவான். இப்படிப்பட்டவனக்கு ஆத்ம சித்தி அதாவது முத்தி நிலை கிட்டாது. 10

ஜஹ மூலாஓ கந்தோ, ஸாஹாபரிவார பஹு குணோ ஹோஇ ।
தஹ ஜிண தம்ஸண மூலோ, ணித்திட்டோ மோக்க மக்கஸ்ஸ ॥ 11

வேரிலிருந்து அடிமரம் உண்டாகிறது. அடிமரத்திலிருந்து கிளை, பூ, காய், கனி முதலிய குடும்பம் தோன்றுகிறது. இதுபோன்றே கணதரர் முதலானோர் ஜைன தர்சனத்தை மோக்ஷ மார்க்கத்திற்கு வேர் என்று கூறியுள்ளார்கள்.

காதையில் உள்ள ‘ குணம் ’ எனும் சொல் அதிகம் என்ற பொருளில் கூறப்பட்டுள்ளது. தீர்த்தங்கர பரம தேவர்கள் ஏற்றுக்கொண்ட தர்சனம் ஜினதர்சனம் எனப்படுகிறது. அந்த தரிசனத்தை உபதேசித்த சங்கம் மூலசங்கம் என அழைக்கப்படுகிறது. அது இருபத்து எட்டு மூல குணங்களை உடையது. அதாவது ஐந்து மகாவிரதம், ஐந்து சமிதி, ஆறு ஆவஸ்யகம், ஐம்புலன் அடக்கம், நீராடாமை, நிலத்தில் உறங்குதல், ஆடை முதலியவைகளைத் தியாகம் செய்தல் (திகம்பர நிலை), தலைமுடி களைதல் (கேசலோஞ்ச்), ஒருமுறை

ஆகாரம் உட்கொளல், நின்ற நிலையில் ஆகாரம் உட்கொள்வது, பல் துலக்காமை இவை இருபத்து எட்டு மூல குணங்கள் எனப்படு கின்றன.

நாற்பத்து ஆறு தோஷங்களின்றி ஆகாரம் ஏற்பது ஏஷணுசமிதி, நடக்கும்போது முன்னே பார்த்துச்செல்வது ஈர்யாபத சமிதி, ஜீவ தயை நிமித்தம் மயில் பிஞ்சம், ஸௌச சுத்திக்காக கமண்டலம் வைத்துக்கொள்வது, இவை யாவும் பகிரங்க நிலை.

அந்தரங்கத்தில் ஆறு திரவியம், ஐந்து அத்திகாயங் கள், ஏழு தத்துவங்கள், ஒன்பது பதார்த்தங்கள், ஆகியவற்றை நிச்சய வியவகார அடிப்படையில் அறிந்து நம்புவது, பேத விஞ்ஞா னத்தின் மூலம் ஆத்ம சொரூபத்தை சிந்திப்பது, அனுபவத்திற்கு கொண்டுவருவது மூல சங்கத்தின் தர்சனமாகும். இத்தகைய ஜைன தர்சனமே மோக்ஷ மார்க்கத்திற்கு வேர் போன்றது. இந்த அடிப்படை வேரிலிருந்து தோன்றும் மோக்ஷ மார்க்கத்தின் அனைத்துக் கிளைகளும் (செயல்களும்) பயன் தரக்கூடியவை.

மேற்கண்ட அடிப்படை தர்சனத்திலிருந்து நழுவி யவர்கள், பஞ்சமகால தோஷத்தால் ஜைனுபாஸர்களாகியுள்ளனர். அவர்கள் – சுவேதாம்பரம், திராவிடம், யாப நீயம், கோபுச்சபிச்ச, நிபிச்ச - இப்படி ஐந்து சங்கங்கள் ஆவர். அவர்கள் சூத்திர சித்தாந் தங்களை அபப்ரம்சத்தில் மாற்றினுர்கள்.

புறத் தோற்றத்தை மாற்றிக்கொண்டு ஆசாரத்தைக் கெடுத்தவர்கள் மூல சங்கத்தினின்றும் நழுவியவர்கள். அவர்களுக்கு மோக்ஷ மார்கம் கிட்டாது. மூல சங்கத்தில் கூறப்பட்ட ஸம்யக் தரிசன, ஞான, சாரித்திரத்தின் வாயிலாகத்தான் முத்தி நிலை கிட்டும் என்று உறுதியாக அறிதல் வேண்டும்.

ஸம்யக் திருஷ்டிகளை வணங்க வைக்க விரும்பும் தர்சன பிரஷ்டர்கள் துர்கதிக்கே ஆளாவர். 11

ஜே தர்ஸணேஸு பட்டா, பாஏ பாடந்தி தம்சன தராணம் |
தே ஹோந்தி லல்ல மூஆ, போஹி புண துல்லஹா தேசிம் || 12

தர்சன பிரஷ்டனும், மித்யா திருஷ்டியுமாகிய ஒருவன் ஸம்யக் திருஷ்டிகளைத் தன் பாதங்களில் வணங்க வைக்கிருனென்ருல் அந்த பிரஷ்டன் அடுத்த பிறவியில் முடவனுகவும், ஊமையாகவும்

பிறப்பான். தவிர அப்பப்பட்டவனுக்கு ஸம்யக் தரிசன, ஞான, சாரித்ரம் கிட்டுவது அரிதாகும்.

தர்சன பிரஷ்டர்கள் மித்யா திருஷ்டிகள் எனப்படுவர். மித்யா திருஷ்டியாக இருந்தும், ஸம்யக் திருஷ்டிகளை வணங்க வைக்க விரும்புபவர்கள் தீவிர மித்யாத்வத்தை உடையவர்களாவர். இத்தகைய தீவிர மித்யா திருஷ்டிகள் அடுத்த பிறவியில் முடமாகவும், ஊமையாகவும் பிறப்பார்கள். அதாவது தாவரமாகப் பிறப்பர். ஓர் புல ஜீவனுகப் பிறந்து அனந்த காலம் வரை நிகோதத்தில் வாசம் செய்வார்கள். அவர்களுக்கு தர்சன, ஞான, சாரித்ரம் உண்டாவதில்லை. மித்யாத்வத்தின் பலனே நிகோதந்தான். பஞ்சம காலத்தில் மித்யா மதத் தலைவர் (ஆசாரியர்) களாகி மக்களை வணங்க வைக்கிருர்கள், பூஜிக்கச் செய்கிருர்கள். இப்படிப்பட்டவர்களைப் பார்க்கும்போது, இரண்டு, மூன்று, நான்கு, ஐம்புலன் ஜீவன்களாகப் பிறக்கவேண்டிய காலம் இவர்களுக்கு முடிந்து விட்டது. இனி ஓர் புலன் ஜீவனுகி நிகோதத்தில் பிறக்க வேண்டிய காலம் வந்துவிட்டதென்று அறிய வேண்டும்.

வெட்கம், பயம் முதலிய காரணங்களுக்காக, ஸம்யக் திருஷ்டி மித்யா திருஷ்டியை வணங்குகிருனென்ருல் ஸம்யக் திருஷ்டியும் மித்யா திருஷ்டியைப் போன்றவனே. 12

ஜே வி படந்தி ய தேஸிம், ஜாணந்தா லஜ்ஜா காரவ பயனே |
தேஸிம் பி ணத்தி போஹி, பாவம் அனுமோய மாணாணம் || 13

ஒருவன் மித்யா திருஷ்டி என்று தெரிந்திருந்தும், வெட்கம் பயம், காரவம் முதலிய காரணங்களுக்காக ஸம்யக் திருஷ்டி வணக்கம் முதலியவைகளைச் செய்கிருனென்ருல் அவனுக்கு தர்சன, ஞான சாரித்திரம் கிட்டவில்லை என்றே கூறவேண்டும். ஏனெனில் அவர்கள் மித்யாத்வமெனும் பாவத்திற்கு அனுமதி வழங்குவதுபோல் ஆகிறது. தான் செய்வது, செய்விப்பது, பிறர் செய்கையை ஆமோதிப்பது மூன்றும் சமம் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

வெட்கம் : நாம் பிறரை வணங்கவில்லையென்ருல் மக்கள் நம்மை அகங்காரம் உள்ளவன், செருக்குள்ளவன் என்றெல்லாம் பேசுவார்கள். ஆகவே நாம் எல்லோரையும் வணங்கவேண்டும் என்று வெட்கி வணங்குவது.

பயம் : குறிப்பிட்ட ஒருவன் அரசாங்கத்தால் மதிக்கப்படுபவன், மந்திர தந்திரம் போன்ற சாமர்த்யங்களைப் பெற்றிருப்பவன், இப்படிப் பட்டவனுக்கு மரியாதை செலுத்தாவிடில் நமக்கு ஏதாவது தொல்லை நேரலாம் என பயந்து மரியாதைச் செலுத்துவது.

காரவம் : இது மூன்று வகைப்படும். (1) ரஸ காரவம் (2) ரித்திகாரவம் (3) ஸாத காரவம் என.

ரஸகாரவம் : இஷ்ட, மிஷ்ட, புஷ்ட ஆகாரங்கள் கிடைக்கும்போது அவைகளில் தன்னை மறந்திருப்பது ரஸ காரவம்.

ரித்தி காரவம் : தவத்தின் காரணமாக ரித்திகள் சித்தியாகுமாயின் அந்த ரித்தி சித்திகளில் மெய்மறந்திருப்பது ரித்தி காரவம்.

ஸாத காரவம் : உடல் நலம் வேண்டும், துன்பங்கள் நிகழக் கூடாது, அப்பொழுதுதான் பிறவிச் சுகங்களில் திளைக்கலாம் என தன்னிலையை மறந்து செயல்படுதல்.

இவ்வாறு நல்லது, கெட்டது என்ற விவேகத்தை இழந்து தரிசன பிரஷ்டர்களைக் கூட வணங்கத் தொடங்கிவிடுகிறுன். இப்படி மித்யா திருஷ்டியை வணங்குவது மித்யாத்வத்தை ஆமோதிப்பதாகும். அவனை நல்லவன் என்று நினைப்பதால் தானும் அவனுக்குச் சமமாகி விடுகிறுன். இந்த நிலையில் இவனுக்கு எப்படி ஸம்யக் தரிசனம் இருக்க முடியும்? ஆகவே சுத்த சம்யக் திருஷ்டி மேற்கண்ட காரணங்களுக்காக மித்யா திருஷ்டிக்கு வணக்கம் முதலியவைகளைச் செய்தல் கூடாது என்பது இதன் முக்கியக் கருத்து.

13

துவிஹம் பி கந்த சாயம், தீஸு வி ஜோஏஸு ஸஞ்ஜமோ டாதி |
ணாணம்மி கரண ஸுத்தே உப்பஸணே தம்ஸணம் ஹோதி || 14

அந்தரங்க பகிரங்க பரிக்ரகங்களின்றி இருத்தல்; மனம், வாக்குச், செயல் மூன்றும் அடங்கி இருத்தல், செய்தல், செய்வித்தல் ஆமோதித்தல் ஆகிய மூவகை தூய்மை பெற்று இருத்தல் செய்தல், செய்வித்தல், ஆமோதித்தல் ஆகிய குற்றங்கள் தன்னை வந்து சேராத வாறு நின்றுகொண்டு, கையில் ஆகாரம் கொள்ளுதல் இவற்றைத் தர்சனம் என்பர்.

தர்சனம் என்ருல் (அபிப்ராயம்) மதம் என்று பொருள்.
புறத்தூய்மை காணப்படுமிடத்தில் அகத்தூய்மையாகிற தர்சனம் உள்ளதென்று அறியப்படுகிறது. அதாவது புறத் தூய்மை அந்தரங்கத் தூய்மையை வெளிப்படுத்துகிறது. தனம், தானியம் முதலிய பகிரங்க பரிக்ரஹங்கள், மித்யாத்வம், கஷாயம் போன்ற அந்தரங்க பரிக்ரஹம் இல்லாது, பிறந்த மேனியில் காட்சியளிக்கும் திகம்பர முத்திரை, ஐம்புலன், மனம் ஆகியவைகளைத் தன்வயப்படுத்துவது, ஒரு புலன் படைத்த தாவரங்கள், இரண்டு முதல் ஐம்புலன் கொண்ட ஜீவன்கள் பால் கருணை, இதுபோன்ற ஸம்யமத்தை மனம், வாக்குச் செயல் மூவகையாலும் கடைபிடிப்பது, செய்தல், செய்வித்தல், ஆமோதித்தல் போன்ற மூன்று விகாரங்கள் இல்லாத ஞானம், தோஷமில்லாத ஆகாரத்தை கையில் ஏந்தி ஏற்பது இவை எல்லாம் ஒட்டு மொத்தமாகக் காணப்படும் நிலையே தர்சனத்தின் உருவம் என்று ஜினேஸ்வரர் வர்ணித்துள்ளார். இப்படிப்பட்ட தவ சிரேஷ்டிகளே வணக்கத்திற்கும், பூஜைக்கும் உரியவர்கள். மற்ற பாஷாண்டிகள் (மித்யா தவசிகள்) வணக்கத்திற்கு உரியவர்கள் அல்லர். 14

ஸம்மத்தாதோ ணாணம், ணாணாதோ ஸவ்வ பாவ உவலத்தீ ।
உவலத்த பயத்தே புண, ஸேயா ஸேயம் வியாணேதி ॥ 15

ஸம்யக் தரிசனத்தினுல் ஞானம் ஸம்யக் ஞானமாகிறது. ஸம்யக் ஞானத்தால் பொருள்களின் உண்மை சொரூபம் அறியப்படுகிறது. பொருள்களின் உண்மை சொரூபம் அறியப்படும்போது நன்மை தீமைகள் அறியப்படுகின்றன.

ஸம்யக் தரிசனமின்றி, ஞானம் மித்யா ஞானமெனப்படும். ஆகவே ஸம்யக் தரிசனம் உண்டான பிறகுதான் ஸம்யக் ஞானம் உண்டாகிறது. ஸம்யக் ஞானத்தால் ஜீவன் முதலிய திரவியங்களின் சொரூபம் உள்ளபடி அறியப்படுகிறது. திரவியங்களின் உண்மை சொரூபம் அறியப்படும்போது நல்வழி எது? தீ வழி எது? என்பது துல்லியமாக அறிய முடிகிறது. எனவே நன்மார்க்கத்தை அறிவதற்கும ஸம்யக் தரிசனம் ஒன்றே முக்கிய பங்கு வகிக்கிறது 15

ஸேயா ஸேயா விதண்ஹூ, உத்துததுஸ்ஸீல ஸீலவந்தோ வி ।
ஸீல பலேணப்புதயம் தத்தோ, புண லஹஇ ணிவ்வாணம் ॥ 16

நல்வழி தீ வழிகளை அறியும் மனிதன் மித்யாத்வ சொபாவத்தை விலக்கியவனுகவும், ஸம்யக் சொபாவத்தையுடையவனுகவும்

ஆகிறன். இந்த ஸம்யக் சொபாவத்தின் காரணமாக மென்மேலும் உயர்வெய்துகிறன். தீர்த்தங்கரர் போன்ற பதவிகளேயும் பெற்று முத்தியடைகிறன்.

நல்வழி தீ வழிகளே அறியும்போது அனுதியாகத் தொடர்ந்து வந்துள்ள மித்யாத்வ ப்ரக்ருதி, ஸம்யக் ஸ்வபாவ ஸ்வரூப ப்ரக்ருதியாகிறது. ஸம்யக் ப்ரக்ருதியினுல் ஸம்யக்த்வ பூர்வகமான புண்ணியம் கிட்டி தீர்த்தங்கரர் முதலான பதவிகளே வகித்து காலக்ரமத்தில் முத்தியடைகிறது. 16

ஜிணவயண மோஸஹமிணம், விஸயஸுஹ விரேயணம் அமிதபூதம் |
ஜரமரண வாஹி ஹரணம், கய கரணம் ஸவ்வ துக்காணம் || 17

பிறவியில் உழலும் இந்த ஜீவனுக்கு மாமருந்தாக விளங்குவது ஜினேஸ்வரன் அருளிய வசனமொன்றேயாம். எப்படி யெனில், புலன் வழியில் இன்பமுண்டென்று எண்ணும் தவருன எண்ணத்தைப் போக்கி அவைகளின்றும் விலக்குகிறது; மேலும், அவ்வசனம் பிறப்பு, இறப்பு, மூப்பு போன்ற வியாதிகளேப் போக்க உதவுகிறது. எல்லாத் துன்பங்களினின்றும் விடுவித்து அழியா நிலேயை அடையச் செய்வதால் தேவாம்ருதத்திற்கு ஒப்பாகவும் கூறப்பட்டது,

பிறவியில் புலன்வழி இன்பங்களே நுகர்ந்து ஜீவன் வினைகளேக் கட்டிக்கொள்கிறது. இதனுல் பிறப்பு, இறப்பு எனும் துன்பத்தால் அவதிப்படுகிறது. இந்நிலேயில் ஜினேஸ்வரன் வசன மெனும் மாமருந்து புலன்வழி செல்வதிலுள்ள தீமைகளேச் சுட்டிக் காட்டி, அவைகளினின்றும் விலகி நிற்க உதவுகிறது உதாரணமாக எளிதில் ஜீரணிக்கமுடியாத ஆகாரத்தால் மலச்சிக்கல் ஏற்பட்டு ஜுரம் முதலிய வியாதிகள் உண்டாகின்றபோது, ஜீரணிக்க உதவும் மருந்து வியாதியைப் போக்கவும், ஆரோக்கியத்தைக் கொடுக்கவும் உதவுவதால் அமிழ்தத்திற்கு ஒப்பாக அம்மருந்து கருதப்படுகிறது.

இது போன்றே புலன்வழி சென்று ஜீரணிக்க முடியாத வினைக்கட்டினுல் பிறவியில் அவதிப்படும் ஜீவனுக்கு, ஜினேஸ்வரன் வசனம் பிறவித் துன்பத்தினின்றும் விலக்கி அழியா இன்ப நிலேயை அடையச் செய்வதால் தேவாம்ருதத்திற்கு ஒப்பாகக் கூறப்பட்டது. 17

ஏகம் ஜிணஸ்ஸ ரூவம், பிதியம் உக்கிட்ட ஸாவயாணம் து |
அவரட் டியாண தஇயம், சவுத்த புண லிங்க தம்ஸணம் ணத்தி || 18

ஜின தர்மத்தில் புற அமைப்பு ஒன்றே ஒன்றுதான், அஃது ஜினேஸ்வரன் ஏற்றுக்கொண்ட திகம்பர நிலை, இரண்டாவது உத்க்ருஷ்ட சிராவக நிலை. மூன்றுவது ஆர்யாங்களை நிலை, இதற்குப் பிறகு நான்காவது நிலை என்பதே கிடையாது.

ஜைன தர்சனத்தில் மூன்று புற அமைப்புகள் தாம் உண்டு. பிறந்த மேனியில் (திகம்பரர்) ஜினேஸ்வரனைப்போல் காட்சியளிப்பது முதல் நிலை. பதினேராவது நிலை எய்திய உத்க்ருஷ்ட சிராவகன் அமைப்பு இரண்டாவது நிலை. பெண் துறவிகள் நிலை மூன்றுவது அமைப்பு. இவைகளைத் தவிர வேறுவித அமைப்பே கிடையாது; வேறு அமைப்புகள் உண்டென்று யாராவது கூறினல் அவர்கள் மூல சங்கத்தினின்றும் வேறுபட்டவர்கள் என்று அறிதல் வேண்டும். 18

சஹ தவ்வ ணவ பயத்நா, பஞ்சத்தீ ஸத்த தச்ச ணித்திட்டா |
ஸத்த ஹ இ தாண ரூவம் ஸோ, ஸத்திட் டீ முணேயவ்வோ || 19

ஆறு திரவியங்கள், ஒன்பது பதார்த்தங்கள், ஐந்து அத்தி காயங்கள், ஏழு தத்துவங்கள் ஆக எல்லாம் ஜினேஸ்வரனல் அருளப் பட்டவை. ஆகவே இவைகளின் உண்மை சொருபத்தில் நம்பிக்கைக் கொண்டவன் ஸம்யக் திருஷ்டி எனப்படுகிருன்.

ஜீவன், புத்கலம், தர்மம், அதர்மம், ஆகாயம், காலம் என ஆறு திரவியங்கள். ஜீவன், அஜீவன், ஆஸ்ரவம், (ஊற்று) பந்தம் (கட்டு) ஸம்வரை (செரிப்பு) நிர்ஜரை (உதிர்ப்பு) மோட்சம் (வீடு) புண்ணியம் (நல்வினை) பாபம் (தீவினை) என ஒன்பது பதார்த் தங்கள், ஆறு திரவியங்களில் கால திரவியம் நீங்கலாக மீதமுள்ள ஐந்தும் அத்திகாயங்கள் (ஜீவன், புத்கலம், தர்மம், அதர்மம் மற்று ஆகாயம்). ஒன்பது பதார்த்தங்களில் புண்ணியம், பாவம் இரண்டை யும் நீக்கிவிட்டால், மீதமுள்ளவை ஏழு தத்துவங்கள் (ஜீவன், அஜீவன், ஆஸ்ரவம், பந்தம், ஸம்வரை, நிர்ஜரை, மோட்சம்).

ஜீவன் : சேதனு (ஞானம்) சொருபமுடையது; அந்த சேதனு ஞான சேதனு, தர்சன சேதனு என இரு வகைப்படும்,

புத்கலம் : ஊறு, சுவை, நாற்றம், நிறம் முதலிய குணங்களையுடையது. இஃது பரமாணு, ஸ்கந்தம் என இருவகைப்படும். மேலும் ஸ்கந்தம் சப்த, பந்த, சூஷ்ம, ஸ்தூல, ஸம்ஸ்தான, பேத, தம, சாயா, ஆதப, உத்யோத முதலிய அனேக விதம்.

தர்மம் : ஜீவ புத்கலங்கள் நடமாடுவதற்கு உதவக்கூடியது.

அதர்மம் : ஜீவ புத்கலங்கள் நிலைத்திருக்க உதவக் கூடியது.

ஆகாயம் : அனைத்துத் திரவியங்களும் இருக்க உதவுவது.

காலம் : ஜீவ புத்கலங்களின் மாற்றங்களுக்குத் துணை இருப்பது.

தர்ம திரவியம், அதர்ம திரவியம், ஆகாய திரவியம் மூன்றும் ஒவ்வொன்றும் உருவமற்றது, செயலூக்கமற்றது.

கால திரவியம் அஸங்கியாதம் (எண்ணற்றது).

கால திரவியத்தைத் தவிர்த்து மற்ற ஐந்து திரவியங்களும் பல பிரதேசங்களையுடையவை; எனவே, அத்திகாயம் எனப்படுகின்றன. கால திரவியம் பல பிரதேசங்களையுடையதல்ல; ஆகவே அது அத்திகாயத்தில் வருவதில்லை.

இவைகளின் விளக்கங்களை தத்வார்த்த சூத்திர உரையில் காண்க.

ஜீவ பதார்த்தம் ஒன்று. அஜீவ பதார்த்தம் ஐந்து. ஜீவனிடம் வினைக் கட்டிற்குத் தகுதி படைத்த புத்கலங்களின் வருகை ஆஸ்ரவம்; கர்மங்கள் கட்டப்படுவது பந்தம்; கர்ம புத்கலங்கள் வருகை தடைப்படுவது ஸம்வரம்; கட்டப்பட்ட வினைகள் விலகுவது நிர்ஜரை; வினைகள் அனைத்தும் நீங்குவது மோட்சம். ஜீவனுடைய சுகத்திற்கு நிமித்த காரணமாக உள்ளது புண்ணியம், துன்பத்திற்கு நிமித்தமாக இருப்பது பாவம். இவ்வாறு ஏழு தத்துவம், ஒன்பது பதார்த்தங்களைச் சுருக்கமாக அறிந்துகொள்க. இவைகளின் சொரூபங்களை ஜினேஸ்வரின் அருளிய ஆகமங்கள் வழியாக அறிந்து நம்பிக்கைக் கொள்வது ஸம்யக்த்வம். இந்த ஸம்யக்த்வத்தை உடையவன் ஸம்யக்திருஷ்டி. 19

ஜீவாதி ஸத்தஹணம், ஸம்மத்தம் ஜினவரேஹிம் பண்ணத்தம் |
வவஹாரா நிச்சயதோ, அப்பாணம் ஹவஇ சம்மத்தம் || 20

ஜீவன் முதலிய பொருள்களில் நம்பிக்கைக் கொள்வது வியவகார ஸம்யக் தரிசனமென்றும், தன் ஆன்ம நம்பிக்கையை நிச்சய ஸம்யக் தரிசன மென்றும் ஜினேஸ்வரன் கூறியுள்ளார்.

தத்துவார்த்தங்களில் நம்பிக்கைக் கொள்வது வியவகார ஸம்யக் தரிசனம். தன் ஆத்ம சொரூபானுவத்தின் மூலம் ஆன்ம நம்பிக்கை, தெளிவு, ருசி கொள்வது நிச்சய சம்யக் தரிசனம். இந்த சம்யக்த்வம் ஆன்மாவினின்றும் தனிப்பட்டப் பொருளல்ல; அது ஆத்ம பரிணமமே; அது ஆன்மாவேயாகும். ஸம்யக்த்வமும் ஆன்மாவும் ஒரு பொருளே. இது நிச்சய ஸம்யக்த்வ மென்று தெளிக. 20

ஏவம் ஜின பண்ணத்தம், தம்ஸண ரயணம் தரேஹபாவேண |
ஸாரம் குண ரயணத்ய, ஸோவாணம் படம மோக்கஸ்ஸ || 21

ஜினேஸ்வரன் அருளிய தர்சனம், குணங்களில் தலை சிறந்த குணமாகவும் இரத்தின த்ரயங்களின் ஸாரப் பொருளாகவும் விளங்குகிறது. முத்தி எனும் அரண்மனையை அடைய முதற்படியாக உள்ளது. ஆகவே ஓ பவ்யனே ! நீ இதை (ஸம்யக் தரிசனத்தை) அந்தரங்க சுத்தியுடன் ஏற்பாயாக. புறச் செயல்களால் ஏற்பது நிச்சயமாகாது. அந்தரங்கத்தில் ஸம்யக் தரிசனத்தை ஏற்பது முத்திக்குக் காரணமாகும். 21

ஜம் ஸக்கஇ தம் கீரஇ, ஜம் ச ண ஸக்கே இ தம் ச ஜத்தஹணம் |
கேவலி ஜினே ஹிம் பணியம், ஸத்தஹமாணஸ்ஸ ஸம்மத்தம் || 22

தகுதி படைத்தவன் ஸம்யக் சாரித்திரத்தை ஆராதிக்கட்டும். சாரித்ரத்தை ஏற்கும் தகுதி இல்லாதவன் குறைந்த பட்சம் ஸம்யக் தரிசனத்தையாவது ஏற்கட்டும். ஏனென்றால் நம்பிக்கையுள்ளவனுக்கு ஸம்யக்த்வம் உண்டென்று கேவலி பகவான் கூறியுள்ளார்.

ஸம்யக்த்வம் உண்டான பிறகு அனைத்துப் பிற பொருள்களையும். பிறவியையும் தியாகஞ் செய்யத் தக்கவைகளென்று அறிகிறான். விடத்தக்கவைகளென்று அறிந்தவைகளை விட்டு, முனி நிலையை ஏற்று ஸம்யக் சாரித்ரத்தை ஆராதிக்கும்போது அவனுக்கு

ஸம்யக்த்வம் உண்டென்று அறியப்படுகிறது, அல்லது ஸம்யக் திருஷ்டி என்று கருதப்படுகிறுன். இவ்வாறு எவரேனும் கூறுவார் களேயாளுல் அவர்களுக்குச் சமாதானம் கூறும் பொருட்டு இக்காதை கூறப்பட்டது.

பிற பொருள்கள் அனைத்தும் விடத்தக்கவைகளென்றும், தன் ஆன்ம சொருபம் ஒன்றே ஏற்புடைய தத்துவமென்றும் அறிந்து நம்பிக்கைக் கொள்ளும்போது மித்யாத்வம் விலகி சம்யக்த்வம் உண்டாகிறது. ஆளுலும் தீவிர சாரித்ர மோகனீய கர்மம் உதயத்தில் இருக்கும்போது சாரித்ரத்தை ஏற்கும் நிலை (முனிநிலை) உண்டாவதில்லை. ஆகவே முடிந்த அளவு சாரித்ரத்தை ஏற்கட்டும். இப்படிப்பட்ட நம்பிக்கையுள்ளவர்களுக்கே ஸம்யக்த்வம் உண்டென்று பகவான் கூறியுள்ளார். இதுவே இக்காதையின் உட்கருத்து. 22

தம்ஸண ணாண சரித்தே தவவிணயே, ணிச்சகால ஸுபஸத்தா |
ஏதே து வந்தணீயா ஜே, குணவாதீ குணதராணம் || 23

தர்சனம், ஞானம், சாரித்ரம், தவம் மற்றும் விநயம் முதலிய நற்குணங்களில் மாருது நிலைத்திருப்பவர்களே போற்றுதற்குரியவர்கள், பாராட்டத் தக்கவர்கள். இவர்களே ஆரோக்யமானவர்களுங்கூட. இத்தகு சிறப்புக் குணங்களுக்கெல்லாம் இருப்பிடமாக விளங்கும் ஜீவன்களை கணதரர்களும் போற்றுகிருர்கள், பாராட்டுகிருர்கள். ஆகவே இவர்கள் நம் வந்தனைக்குரியவர்கள்.

தர்சனம் முதலியவைகளிலிருந்து நழுவியவர்கள் அல்லது மேற்கண்ட குணங்களையுடைய நல்லோர்கள்பால் பொருமை உள்ளங்கொண்டு வணக்கம் செலுத்தாதவர்கள் அனைவரும் வணக்கத்திற்குரியவராகார். 23

ஸஹஜுப்பண்ணம் ருவம் தட்டும் ஜோ மண்ணஏ ண மச்சரிஓ |
ஸோ ஸஞ்சம படிவண்ணோ மிச்சாஇட்டீ ஹவஇ ஏஸோ || 24

திகம்பர நிலையிலுள்ள (இயற்கை நிலை) மகா முனிகளைக் கண்டு விநயர், வணக்கம் முதலியவைகளைச் செலுத்தாதவர்கள் மித்யாத்ருஷ்டிகளே. ஏனெனில் இத்தகையவர்களுக்கு ஜினேஸ்வரன் அருளிய திகம்பர நிலையில் நம்பிக்கை இல்லாததே காரணம்.

பிறந்த மேனியிலுள்ள முனிபுங்கவர்களைக் கண்டு, பொருமை காரணமாக வணக்கம் செலுத்தா தவர்களைப் பார்த்தால். இவர்களுக்கு இந்த திகம்பர நிலையில் நம்பிக்கை இல்லை என்றே தோன்றுகிறது. ஆகவே இத்தகையவர்கள் மித்யா த்ருஷ்டி எனப்படுகிருர்கள், திகம்பர நிலையில் நம்பிக்கை இல்லாதவர்கள் அல்லது இந்நிலையை ஏற்க மறுப்பவர்களை மனதிற் கொண்டு கூறப்பட்டதாகும். 24

அமராண வந்தியாணம், ரூவம் தட்டூண சீல ஸஹியாணம் |
ஜே காரவம் கரந்தி ய, ஸம்மத்த விவஜ்ஜியா ஹோந் தி || 25

தேவர்களால் போற்றி வணங்கப்படும் உருவம் திகம்பர உருவம். ஏனெனில், இது சீலா சாரங்களுக்கெல்லாம் உறைவிடமாக விளங்குகிறது. இத்தகு பெருமை மிக்க நிலையில் விளங்கும் உருவத்தைக் கண்டு வணங்காதவனை ஸம்யக்த்வம் இல்லாதவன் என்று அறிவாயாக,

எந்த திகம்பர உருவத்தைக் கண்டு அணிமா, மகிமா முதலிய ரித்திகளைப் பெற்றுள்ள தேவர்களும் சிரம் தாழ்த்தி வணங்கு கிருர்களோ, அந்த உருவத்தைக் கண்டு பொருமை உள்ளத்தால் வணங்காத ஒருவனுக்கு ஸம்யக் தரிசனம் எப்படி இருக்க முடியும் ? ஆகவே ஸம்யக் தரிசனம் இல்லையென்று அறிக. 25

அஸ்ஸஞ்ஜதம் ண வந்தே, வத்தவி ஹீணோவி, தோ ண வந்திஜ்ஜ |
தோண்ணி வீ ஹோந்தி, ஸமாணா ஏகோ வி ண ஸஞ்ஜதோ ஹோதி || 26

ஸம்யமம் இல்லாதவனை வணங்கக் கூடாது. அந்தரங்க ஸம்யமம் இல்லாமல் புறத்தே ஆடைகளைத் தியாகம் செய்திருந்தாலும் வந்தனைக்குத் தகுதி படைத்தவராகார். இவ்விருவருமே ஸம்யமம் இல்லாதவருக்குச் சமம். ஆகவே ஒருவர் கூட வந்தனைக்குரியவ ரல்லர்.

இல்லறத்தைத் தியாகம் செய்யாதவன் அஸம்யமீ எனப்படுகிருன். புறத்தே ஆடையின்றி திகம்பர நிலையில் இருந்தும், அகத்தே ஸம்யமம் இல்லாதிருப்பின், ஸம்யமம் இல்லாதவனென்றே கருதப்படுவான். ஆகவே இவர்கள் இருவருமே வணக்கத்திற்குரியவ ரல்லர்.

திகம்பர நிலையை ஆசார்ய தேவர்கள் தர்சனம் (ஸம்யக் தரிசனம்) என்றே கூறி வந்துள்ளார்கள். ஏனெனில் அகப் புறப்பற்று (பரிக்ரகம்) நீங்கியவருக்கே நக்ன திகம்பர நிலை இருக்க முடியும். அந்தரங்க பாவ ஸம்யமம் இல்லாமல், புறத்தே பிறந்த மேனியில் இருப்பதால் மட்டும் ஸம்யமீயாகி விட முடியாது. இதை நன்கு நினைவிற்கொள்ள வேண்டும்.

இதிலிருந்து ஒரு ஐயம் எழக்கூடும். புற ஒழுக்கங்களும், ஆசார விதி முறைகளும் சாஸ்திர சம்மதமாக இருக்கும் ஒருவனுடைய உள்ளத்தில் கபடம் நிறைந்திருக்குமானல் அதை எப்படி அறிந்து கொள்வது? அல்லது மித்யாத்வம் இருப்பின் அதை உறுதி படுத்துவது எப்படி? இதுபோன்ற அந்தரங்கங்கள் கேவலிகளின் கேவல ஞானத்தால் அறியப்படுபவை. நம்போன்றவர்கள் கணிப்பிற்கு வராதவை. இப்படிப்பட்ட நிலையில் முடிவிற்கு வராமல் வணங்குவதற்கு என்ன முறை உள்ளது?

அந்தரங்கத்தில் உள்ள கபடம் நமக்குத் தெரியாத வரை குற்றமற்ற புற ஒழுக்கங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு வணங்குவதால் தோஷமில்லை. பிறகு ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் அந்தரங்கத்தில் உள்ள குறைகள் அறியப்படுமானல் அன்று முதல் நம் வணக்கத்தை நிறுத்திக் கொள்ளலாம். மித்யாத்வத்தைப்பற்றி நாம் பேசவேண்டியதே இல்லை. காரணம் இது கேவலிகளால் அறியப் படும் விஷயம். சம்சாரி ஜீவனுடைய அறிவிற்கு எட்டுகிறவரைதான் நம் விவாதங்கள். நம் அறிவிற்கு அப்பாற்பட்ட விஷயத்தைப் பற்றி விவாதிப்பதே தவருனது. இது ஸர்வக்ஞனல் அருளப்பட்டதாகும். வியவகார நிலையில் உள்ள ஜீவனுக்கு வியவகாரமே அடைக்கலம்.

ஒத்த குணத்தைக் கொண்டு (வியவகாரம்) உள்ளார்ந்த குணத்தை அறிவதையே, வியவகார ஜீவனுக்கு வியவகாரமே அடைக்கலமென்று கூறப்பட்டது. 26

ண வி தேஹோ வந்திஜ்ஜஇ ண வி ய குலோ ண வி ய
ஜாஇஸஞ்ஜுத்தோ ।
கோவந்தமி குணஹினோ ண ஹு ஸவணோனேய
ஸாவவோ ஹோஇ ॥ 27

உடல் வணங்கப்படுவதில்லை, குலம் வணங்கப்படுவதில்லை. ஒரே ஜாதி என்பதற்காகவும் வணங்கப்படுவதில்லை, ஏனென்ருல் வணங்கப்படும் ஜீவனிடத்தில் குணம் இல்லையென்ருல் யார்தான்

வணங்குவார்கள் ? குணமில்லாதவன் துறவியுமல்ல, இல்லற நோன்பியு மல்ல.

உலகியலை ஒட்டிப் பார்த்தாலும் குணமில்லாதவன் சிறந்தவனாகக் கருதப்படுவதில்லை. அழகிய உருவமிருந்தாலென்ன, உயர் குலத்தில் உதித்திருந்தாலென்ன, ஜாதி உயர்ந்ததாக இருந்தாலென்ன ? இவை யாவும் மோக்ஷமார்க்கத்திற்குரிய குணங்களல்ல. மோக்ஷ மார்க்கத்திற்கு ஸம்யக் தரிசன ஞான சாரித்ரமெனும் மும் மணிகளே குணங்கள். இதில்லாமல் ஜாதி, குலம் முதலியவை எப்படி வந்தனைக் குரியவையாகும் ? இவை முனி நிலைக்கோ, சிராவக நிலைக்கோ உதவாது. முனி நிலைக்கும், சிராவக நிலைக்கும் உதவுவது மும்மணிகளேயாம். ஆகவேதான் இம் மும்மணிகளை உடையவர்களே வந்தனைக்கு உரியவர்கள். மற்றவை அல்ல. 27

வந்தமி தவஸாவண்ணா சீலஞ் ச குணஞ் ச பம்ப சேரஞ் ச |
சித்தி கமணஞ் ச தேசிம் ஸம்மத்தேண சுத்த பாவே ண || 28

தவத்தை மேற்கொண்டு திகம்பர நிலை எய்திய பெருமகனை நான் வணங்குகிறேன். மேலும் அவருடைய சீலாச்சாரம், குணம், பிரம்மச்சர்யம் முதலியவைகளுக்கும் ஸம்யக்த்வம் கலந்த எனது சுத்த பாவ நமஸ்காரங்கள். ஏனென்றால் அவருடைய அந்த குணங்களால் அதாவது ஸம்யக்த்வம் கலந்த சுத்த பாவங்களால் மோக்ஷம் அவரை நாடி நடைபோடுகிறது.

உடல் முதலியவை வந்தனைக்குரியவை அல்ல, குணம் ஒன்றே வணக்கத்திற் குரியதென்று முன்னர் கூறப்பட்டது. ஆனால் இப்போது வந்தனைக்குரிய குணங்களைப் பெற்றுள்ள குணவானுக்கு வணக்கம் தெரிவிக்கப்படுகிறது. தவமேற்று இல்லறம் துறந்து முனிநிலை அடைந்தவருக்கும், ஸம்யக்த்வம் கலந்த அவருடைய சீலகுண பிரம்மச்சர்யத்திற்கும் சுத்த பரவத்தால் வந்தனை செய்யப்பட்டது.

சீலம் = உத்தர குணம், குணம் — மூல குணம், பிரம்மச்சர்யமென்றால் ஆத்ம சொரூபத்தில் தோய்ந்திருக்கும் நிலை அதனை கருத்தில் கொண்டு வணக்கம் செலுத்தப்படுகிறது.

மொத்தக் கருத்து என்னவென்றால் முதலில் திரவிய லிங்கி முனிகளையும், பின்னர் பாவலிங்கி முனிகளையும் மனதிற்

கொண்டு கூறப்பட்டதாகும். புற ஒழுக்கங்களை மட்டும் குறிப்பாகக் கொள்ளும்போது, அந்தரங்க ஒழுக்கங்களில் கவனம் செலுத்துவதில்லை. ஆனல் அடுத்து அந்தரங்க நோக்கில் வணக்கம் செலுத்தும் போது சொல்லாமலே புற ஒழுக்கங்களுக்கும் வணக்கம் செலுத்தப் படுகிறதென்று அறியவேண்டும் 28

சஉ ஸட்டி சமரசஹிஓ சஉதீஸஹி அஇஸ ஏஹிம் ஸஞ்சுத்தோ |
அணவர பகு சத்தஹிஓ கம்மக்கய காரண நிமித்தோ || 29

அறுபத்து நான்கு சாமரைகள், முப்பத்து நான்கு அதிசயங்களை உடையவர், தன்னுடைய தத்துவ விளக்கங்களால் மக்களுக்கு நன்மை பயப்பவர், கர்ம க்ஷயத்திற்கு காரண புருடராக விளங்குபவர் ஆகிய தீர்த்தங்கர பரம தேவர்கள் வந்தனைக்குரியவர்கள்.

அறுபத்து நான்கு சாமரைகள், முப்பத்து நான்கு அதிசயங்கள் போன்ற பல பாஹ்ய (பகிரங்க) ஐஸ்வர்யங்கள் தீர்த்தங்கரரின் பெருமையைக் குறிப்பவை. நல்லுரையால் பிராணிகளுக்கு நன்மை விளைப்பவர், கர்ம க்ஷயத்திற்கு காரணகர்த்தர் என்ற இருவித விசேஷ குணங்களுக்காக தீர்த்தங்கரர் பூஜைக்கும் வந்தனைக்கும் உரியவர். ஆகவே தீர்த்தங்கரர் எப்படி பூஜைக்குரியவரென்று ஐயங் கொள்ள வேண்டியதில்லை. தீர்த்தங்கரர் ஸர்வக்ஞன் (முழுதுணர் ஞானி), வீதாரகன் (ஆசை, வெகுளி, மயக்கங்கள் இல்லாதவன்). இந்திரன் முதலான பக்தர்கள் ஸமவ சரணம் போன்ற பகிரங்க ஐஸ்வர்யங்களால் அவர் பெருமையை உலகறிய செய்கிறுர்கள் இவைகளால் அவருக்கு ஒரு பிரயோஜனமும் கிடையாது. அவர் திகம்பர நிலை எய்தி ஆகாயத்தில் நிற்பவர். 29

ணாணேண தம்ஸணேண ய தவேண சரியேண ஸஞ்ஜமகுணேண |
சஉஹிம் பி ஸமாஜோ கே மோக்கோ ஜிணஸாஸணே திட்டோ || 30

ஞானம், தர்சனம் தவம் மற்றும் சாரித்திரம் இந் நான்கின் கூட்டுறவால் உண்டாகிறது ஸம்யம தர்மம். இச் சம்யம குண விஷேசத்தால் மோக்ஷம் கிட்டுமென்று ஜின சாசனம் கூறுகிறது. 30

ணாணம் ணரஸஸ ஸாரோ ஸாரோ வி ணரஸ்ஸ ஹோஇ ஸம்மத்தம் |
ஸம்மத்தாஓ சரணம் சரணாஓ ஹோஇ ணிவ்வாணம் || 31

பொதுவாக ஒரு பொருள் ஏற்புடையதா ? இல்லையா ?

என்று பகுத்துப் பார்க்கும் ஆற்றல் அறிவிற்குத்தான் உண்டு, இந்த அடிப்படையில் அறிவு தேவைகளில் முதலிடம் பெறுகிறது. அறிவிற்கு பிறகு ஸம்யக்த்வம் (ஸம்யக் தரிசனம்) மிகவும் சாரப் பொருளாக விளங்குகிறது ஏனென்றால் ஸம்யக் தரிசனம் இல்லாத ஞானம் மித்யா ஞானமெனப்படுகிறது. அடுத்து ஸம்யக்த்வம் இருக்குமாயின் சாரித்திரமும் இருக்கும். ஞானத்தைப் போலவே ஸம்யக்த்வமில்லாத சாரித்ரம் மித்யா சாரித்ரமெனப்படும், ஆகவே இதிலிருந்து ஸம்யக்த்வம் கலந்த சாரித்ரமே முத்தியை கொடுக்க வல்லதென்பது உறுதியாகிறது.

சாரித்ரத்தால் மோக்ஷம், ஆனல் அந்த சாரித்ரம் ஞான மூலமாக அடையும்போது உண்மை சாரித்ரமாகிறது. அந்த ஞானம் ஸம்யக் தரிசன அடிப்படையில் இருக்குமானல் ஸம்யக் ஞானமாகும். இப்படி ஊன்றிப் பார்க்கும்போது ஸம்யக் தரிசனத்தின் முக்யத்வம் (இன்றியமையாமை) சொல்லாமலே விளங்குகிறது. ஆகவே ஸம்யக்த்வம் சாரப் பொருள்களில் முதன்மை ஸ்தானத்தைப் பற்றிக் கொள்கிறது. பிறகுதான் ஞானம், சாரித்ரங்களுக்குப் பெருமை. 31

ணாணம்மி தம்ஸணம்மிய தவேண சரிஏண ஸம்ம ஸஹிஏண।
சவுண்ஹம்பி ஸமாஜோகே சித்தா ஜீவா ண ஸந்தேஹோ|| 32

ஞான தர்சனங்களோடு ஸம்யக்த்வம் ஸம்யக் சாரித்ரம் ஒன்று சேரும்போது ஜீவன் சித்த நிலையை அடைகிறது. இதில் சந்தேகமில்லை.

இதற்கு முன் சித்த நிலையை அடைந்தவர்கள் அனைவரும் ஸம்யக் தரிசனம், ஞானம், சாரித்ரம், தவம் ஆக நான்கின் ஒருங்கிணைந்த நிலையில்தான் மோக்ஷம் அடைந்திருக்கிறார்கள். இது ஜினேஸ்வரன் வாக்கு; இதில் ஐயத்திற்கு இடமில்லை. 32

கல்லாண பரம்பரயா லஹந்தி ஜீவா விசுத்த சம்மத்தம் ।
ஸம்மத்தம்ஸண ரயணம் அக்கேதி சுராசுரே லோஏ || 33

பரம்பரையாக ஆத்ம கல்யாணத்தை முன்னிட்டுத் தூய ஸம்யக் தரிஸனத்தை ஜீவன்கள் பெறுகின்றன. ஆகவே ஸம்யக் தரிசனம் விலை மதிக்க முடியாத ஒரு இரத்தினம். தேவர்களும், அசுரர்களும் நிரம்பிய இவ்வுலகில் பூஜைக்குரிய பொருள் ஸம்யக் தரிசனமே.

இருபத்தைந்து குற்றங்களில்லாத விசுத்த (தூய) ஸம்யக்த்வத்தினுல் பரம்பரையாகத் தீர்த்தங்கர பதவியைப் பெறுகிருர்கள். ஆகவே இந்த ஸம்யக்த்வமெனும் இரத்தினம் உலகில் தேவர்களாலும், அரக்கர்களாலும், மானிடர்களாலும் பூஜிக்கத் தக்கப் பெருமை பெற்றுள்ளது. தீர்த்தங்கர ப்ரக்ருதி பந்தத்திற்குக் காரணம் பதினறு பாவனை களென்று கூறப்பட்டுள்ளது. அவைகளில் முதலாவது தர்சன விசுத்தியாகும். இதுவே விநயம் முதலிய பதினைந்து பாவனைகளுக்குக் காரணமாக விளங்குவதால் ஸம்யக் தரிசனத்திற்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. 33

லத்தூண ய மணுயத்தம் ஸஹியம் தஹ உத்தமேண கோத்தேண ।
லத்தூண ய ஸம்மத்தம் அக்கய ஸோக்கம் ச மோக்கஞ் ச ॥ 34

உத்தம கோத்திரம், மானிடப் பிறவி இவைகளோடு ஸம்யக் தரிசனத்தைப் பெற்று, என்றும் அழியா இன்ப நிலை வடிவமான கேவல ஞானத்தையும் அடைந்து, மோக்ஷத்தை அடைகின்றன. இவையெல்லாம் ஸம்யக் தரிசனத்தின் பெருமைகளேயன்றி வேறில்லை. 34

விஹரதி ஜாவ ஜிணிந்தோ ஸஹஸ்ஸட்ட சுலக்கணேஹிம் ஸஞ்ஜுத்தோ ।
சஉதீஸ அஇஸய ஜுதோ ஸா படிமா தாவரா பணியா ॥ 35

கேவல ஞானம் உண்டான பிறகு, ஜினேஸ்வரன் இவ்வுலகில் ஸ்ரீ விஹாரம் செய்யும் காலம் வரை அவருடைய அந்த உருவம் (உடல்) 'தாவர ப்ரதிமா' என்று அழைக்கப்படுகிறது. பகவான் ஜினேஸ்வரன் 1008 லக்ஷணங்களை யுடையவர். ஸ்ரீ விருக்ஷம் முதலிய 108 லக்ஷணங்களும், மச்சம் முதலிய 900 வியஞ்சன லக்ஷணங்களும் சேர்ந்து 1008 லக்ஷணங்களை யுடையவர்.

34 அதிசயங்களில் பிறவி அதிசயங்கள் பத்து. அவை: வியர்வையின்மை, தூய்மை, வெண் உதிரம், சமசதுரசம் ஸ்தானம், வஜ்ஜிர விருஷப நாராச ஸம்ஹனனம், பேரழகு, மணம், நல்ல லக்ஷணம், தன்னிகரற்ற சக்தி, இதமான மொழி.

காதி வினை அகன்றதினுலுண்டாகும் 10 அதிசயங்கள்: நூறு யோஜனை சுற்றளவு வரை சுபிட்சம், ஆகாயத்தில் செல்வது, உயிர் வதையின்மை, ஆகார மின்மை, உபசர்க மின்மை, நான்முகனுகக் காணப்படுவது, அனைத்துக் கலைகளுக்கும் சுவாமி, நிழலின்மை,

கண் இமை கொட்டாமை, முடி, நகம் வளராமை. இவை காதி வினைகள் அகன்றதினால் உண்டாகும் பத்து அதிசயங்கள்.

தேவர்கள் செய்யும் 14 அதிசயங்கள் : ஸகலார்த்த மாகதி பாஷா, அனைத்துயிர்களிடத்தும் அன்பு, ஏக காலத்தில் எல்லா பருவங்களின் பூப் பழங்கள் உண்டாகுதல், பூமி கண்ணாடியைப் போல் காண்பது, இதமான மந்தமாருதம் (காற்று), உலகில் மகிழ்ச்சிப் பொங்குதல், கற்கள் இல்லாத நிலம், கந்தோதக விருஷ்டி, ஸ்ரீவிஹாரம் செய்யும்போது பாதங்களுக்கு அடியில் தாமரை மலரை உண்டாக்குதல், பூமி வளம் பெறுதல், ஆகாயம் நிர்மலமாக இருத்தல். தேவர்கள் வரவேற்கும் ஒலி, தர்மசக்ரம் முன் செல்லுதல், அஷ்ட மங்கலம். இப்படி பதினான்கு அதிசயங்கள் தேவர்களால் செய்யப்படுவன. (10 + 10 + 14 = 34 அதிசயங்கள்.)

8 ப்ராதி ஹார்யங்கள்: அசோக மரம், புஷ்ப விருஷ்டி, திவ்ய த்வனி, சாமரை, சிம்மாசனம், முக்குடை, பாமண்டலம், துந்துபி இப்படிப்பட்ட அதிசயங்களுடனும், அனந்த ஞானம், அனந்த தரிசனம், அனந்த சுகம், அனந்த வீரியமெனும் அனந்த சதுஷ்டயங்களுடனும் தீர்த்தங்கர பரமதேவன் ஜீவராசிகளுக்கு தர்மோபதேசம் செய்யும் பொருட்டு ஸ்ரீ விஹாரம் செய்யும் வரை உள்ள உடல் 'தாவர பிரதிமா' என்று கூறப்படுகிறது. அதாவது தீர்த்தங்கரர்களுக்கு கேவல ஞானம் உண்டான பிறகு ஒரே நிலையிலிருக்கும் உடல் தாவர பிரதிமா என்று கூறப்படுகிறது. பிற்காலத்தில் ஆலயங்களில் சிலை வழிபாடு செய்யப் படுவதும் இதன் வழிப்பட்டதாகும். 35

பாரசவிஹதவ ஜுத்தா கம்மம் கவிஊண விஹிபலேண ஸம் |
வேஸட்ட சத்ததேஹா ணிவ்வாண மணுத்தரம் பத்தா || 36

ஸம்யக் தரிசனத்தின் மகிமையால், அந்தரங்கம் ஆறு. பகிரங்கம் ஆறு, ஆக பன்னிரெண்டு வகை தவங்களை நோற்று, திரவிய க்ஷேத்திரம் முதலான நான்கின் துணை கொண்டு உடலை விடுத்து, மீண்டும் பிறவா நிலையை அடைகிறார்கள். அதாவது முத்தி அடைகிறார்கள்.

தவத்தின் பலத்தால் கேவல ஞானத்தைப் பெற்று, விஹாரம் செய்யும் வரை உடலுடன் கூடி இருந்து, திரவிய, க்ஷேத்ர, கால, பாவங்களின் துணைகொண்டு அகாதி வினைகளையும் வென்று

அழியா நிலையாகிற முத்தி நிலையை அடைகிருர்கள், அப்போது லோகத்து உச்சியில் தங்கிவிடுகிருர்கள். அங்கு செல்வதற்கு ஒரு சமய நேரமே தேவைப்படுகிறது அச்சமயத்தை ‘ஜங்கம பிரதிமா’ என்கிருர்கள். இவ்வாறு ஸம்யக் தரிசன ஞான சாரித்திரத்தால் முத்தி கிட்டுகிறது. இவைகளில் ஸம்யக் தரிசனம் மிக மிக முக்கியம். 36

தர்சன பாகுடம் முற்றும்.